
அரசியல், சமூக, பொருளாதார இதழ்

# எழுநிலம்

மாத இதழ் | மணம் 13 | ஜூன் 2022 | திருவள்ளுவர் ஆண்டு 2053



## மாணவர் சக்தி

## மரணப்படுக்கையில் இலங்கைத் தீவு

## எரியூட்டப்பட்ட யாழ். நூலகம்

## The Incinerated Jaffna Library

## The Internet and The Youth of this Generation

## பெண்களும் சமூக வலைத்தளங்களும்

அகவை 2 இல் கால் தடம்



# இயற்கை!!

**பொழில்**

இயற்கை
கண்களுக்கு மட்டுமா
பெரு விருந்து?
சுத்தக் காற்றை
சுவாசிக்கக் கொடுக்கும்
மா மருந்து!!

மாரி மழையும்
கோடை இடியும்
குறையறக் கொடுக்கும்
கொடையாளி!!

பறவைகளுக்கு சரணாலயம்!!
பசித்தோருக்கெல்லாம்
புசிக்கக் கொடுக்கும்
அட்சய பாத்திரம்!!
தூரியாடவும் தூணாகவும்
நிழல் தருவதாகவும்.
பச்சிலையாகவும்
பயன்களோ பல்லாயிரம்!!

சிந்தை தொலைத்தான்
மனிதன்!!
விந்தை புரிவதாய் எண்ணி
சித்தம் குழம்பினான்.
விஞ்ஞானத்தின்
அதீத வளர்ச்சி - என்று
அசுத்தக் காற்றால்
அண்டத்தை நிரப்பினான்!!
இயற்கையை உழுது
கட்டடக் காடுகள்
கட்டித் தொலைத்தான்.

நிம்மதியையும்
சேர்த்துத் தொலைத்தான்!!
காலம் தப்பிய பருவநிலைகளும்
வெள்ளப் பெருக்கும்,
தண்ணீருக்கே தவிக்கும் நிலையும்
தகிக்கும் தரணியும்
சுற்றுச் சூழலைச்
சேதம் செய்ததால்
கண்ட பலனைக் கண்டுகொண்டோம்.

ஆகாய வெளியை
அளக்கத் தெரிந்தவன்
பிண்டமும் இல்லாப்
பெரு வியாதியை
கண்டு நடுங்கும்
காலம் வந்தது!!

உருவமில்லா 'வைரஸ்'
உருமாறி மாறி
உலகை உலுப்புவதும்
காலம் தவறிய மரணங்கள்
நிகழ்வதும்.
மானிடன் விதைத்த
விதையன்றி
வேறென்ன?

முக்காடு போட்டு முகத்தை மூடி
எக்காலமும் வாழும்
வாழ்வும் வாழ்க்கையா?

இயற்கையோடிணைந்து
வாழ்ந்த காலத்தில்
நோயற்ற வாழ்வு எமக்கிருந்தது.!
மட்டற்ற மகிழ்ச்சி
மனதில் இருந்தது!
குழந்தைகள் வாழ்வு
குதூகலமாயிருந்தது!!

இப்போதும் காலம் கடந்து
விடவில்லை..
இயற்கையை நேசிப்போம்.!!
பூசிப்போம்..!!
கடினம்தான்..ஆயினும்
செயற்கையை
முடிந்தவரை தவிர்ப்போம்.
சுத்தத்தைப் பேணுவோம்.
சூழலைக் காப்போம்..

மாத இதழ் | மணம்: 13
ஜூன்
தொடர்புகளுக்கு:-
ezhunilam@yahoo.com
www.ezhunilam.com

## உள்ளடக்கம்...


- ஆசிரியர் கருத்து... 03
- மரணப்படுகையில்.. 06
- ஜனாதிபதியை பதவி விலக்க... 09
- எரியூட்டப்பட்ட யாழ்.நூலகம் 11
- பெற்றோர், ஆசிரியர்களின்.... 13
- போதைக் கலாசாரத்தால்... 16
- பெண்களும் சமூக.... 18
- சிந்திக்க... 20
- மாணவர் சக்தி... 21
- இளமைக் காலம் (கவிதை)... 23
- ஊர் உலா.... 24
- விமர்சனத்தால் (கவிதை)... 27
- வங்கம் தந்த பாடம் ... 28
- The Incinerated .. 31
- Island of Sri Lanka ... 33
- The Internet and The.. 35




## திருக்குறள்

**குறள் 640:**

"முறைப்படச் தழ்ந்து முடிவிலவே செய்வர்
திறப்பா டிலாஅ தவர் "

**விளக்க உரை:**

எந்தச் செயல்களையும் செய்து முடிக்கும் திறன் இல்லாதவர்கள், முன்பே எவ்வளவுதான் தம்மைத் தயார்படுத்தி இருந்தாலும், செய்யும் போது அவற்றை அரைகுறையாகவே செய்வர்.












என்ன புத்தகம், இணையத்தளம் இரண்டையும் அடியோடு மாற்றி விட்டீர்கள்? புதிய வடிவில் அருமையான புத்தகம். இம்முறை நீண்ட கட்டுரைகளாக இல்லாமல் அளவாகவும், அருமையாகவும் வந்திருக்கிறது. எங்கள் ஆதரவு உங்களுக்கு என்றும் உண்டு.

**மணியரசன்**
**குடும்பம் பேர்ளின்**

'புத்த தேவா' கதை அருமையிலும் அருமை. எப்படித்தான் இப்படியான கருத்துக்கள் கதாசிரியருக்கு உருவாகிறதோ புத்தகத்தை தொடர்ந்து வாசிப்பதற்கு கதாசிரியர் 'அஜந்தி' யும் ஒரு காரணம். தெளிந்த நடையில் எல்லோராலும் விளங்கிக் கொள்ளும் வண்ணம் கதை எழுத நிறைய திறமை வேண்டும். வாழ்த்துகள்.

**சாரதா**
**பெல்ஜியம்**

இங்கே நாடு தகிக்கிறது. எதுவுமே வாங்க முடியாத நிலைமை. எவ்வளவு காலத்துக்கு எங்களைப் போன்ற சாதாரண மக்களால் வாழ முடியுமோ தெரியவில்லை.

நாட்டு நடப்பை உங்கள் மூலமாகத் தெரிந்து கொள்கிறோம். நிறையப் பிரச்சனைகளை புட்டுப்புட்டு வையுங்கள்.

புத்தகம் சிறப்பாக இருக்கிறது. இங்குள்ள பெண்களின் பிரச்சனைகளை தயவுசெய்து வெளிக் கொணருங்கள். இது எனது ஆதங்கம்.

**கனிஸ்ரஸ் கொலின்ஸ்**
**மன்னார்**

# அக்கறை உறவுகள்

அரசியற் கட்டுரைகள் தொடர்ந்து வாசிக்கிறேன். நிறைய விடயங்களைத் தெளிவாகத் தருகிறீர்கள். மொத்தத்தில் 'எழுநிலம்' நல்ல தரமான புத்தகமாக வந்து கொண்டிருக்கிறது.

பெண்கள் பிரச்சனைகள் இன்னும் கொஞ்சம் ஆணித்தரமாக வந்தால் நன்றாக இருக்கும். புதிய எழுத்தாளர்களை ஊக்குவிப்பது நல்லதுதான். மேன்மேலும் வளர வாழ்த்துகள்.

**திலகேஸ்வரி தங்கராசா**
**இத்தாலி**

இம்முறை அதிகளவானோருக்கு புத்தகத்தை அனுப்ப முடிந்தது. புத்தகம், இணையத்தளம் இரண்டையும் ஒரே தடவையில் பார்க்கக் கூடிய வாறு செய்திருப்பது நன்றாக இருக்கிறது. பல பேருக்கு புத்தகத்தை வாசிக்க எடுக்கத் தெரியவில்லை. இணையத்தில் ஒரு சிறு விளக்கம் கொடுப்பீர்களா? நான் கட்டுரைப் பிரியன். கட்டுரைகள் அனைத்தும் சூப்பர்.

**வள்ளுவன்.**
**தாயகம்**

நாடு கடந்து வாழும் எங்களுடைய தலைமுறையினரே எல்லாவற்றையும் மறந்து விடும் நிலை இருக்கும்போது அடுத்த தலைமுறையை நினைக்கவே பயமாக இருக்கிறது.

'எழுநிலம்' படிக்கும்போது நாட்டிற்கு ஓடிப் போகவேண்டும் என்ற ஏக்கம் எழுவதைத் தவிர்க்க முடியவில்லை. இது உங்கள் எழுத்திற்குக் கிடைத்த வெற்றி என்றுதான் நான் சொல்வேன்.

ஒன்றிரண்டு முக்கியமான கட்டுரைகளையாவது ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து விட முடியுமா? இளந் தலைமுறை கட்டாயம் இவற்றைத் தெரிந்திருக்க வேண்டும்.

**பார்த்திபேந்திரன்**
**ஒன்ராறியோ**

புத்தகம் வண்ண மயமாக இருக்கிறது. 'நந்திக்கடல்' கவிதை எனக்கு மிகவும் பிடித்திருந்தது.

முள்ளிவாய்க்கால் உண்மைச் சம்பவங்கள் என்னை நித்திரையிலும் அலைக்கழித்தன. உண்மையிலேயே வலி சுமந்த வரிகள்.

என்றுதான் எங்களுக்கு நிம்மதி கிடைக்குமோ?

**மல்லிகா**
**நியூசிலாந்து**

அட்டைப்படம் அருமை. திறமையான தேர்வு. அந்த ஒரு படம் மட்டுமே ஆயிரம் கதை சொல்கிறது. சில கவிதைகளை இன்னும் கொஞ்சம் மெருகு படுத்தலாம்.

ஆனாலும் கவிஞனின் உள்ளக் குமுறலை அவை வெளிப்படுத்தியிருந்தன. ஆசிரியர் தலையங்கம் நன்றாக எழுதுகிறீர்கள். இன்னும் கொஞ்சம் நீட்டி எழுதலாமோ?

**சாந்தா**
**மேரிலான்ட்**



## ஆசிரியர் பக்கம்

# இலங்கையின் அரசியற் களத்தில் சூதாட்ட நாயகன்

இலங்கைத் தீவின் பெரும் பணக்காரரான திரு தம்மிக பெரேரோ அரசியலில் வெளிப்படையாகக் கால் பதிப்பதற்கு ஏதுவாக வழி விட்டு, தனது தேசியப் பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்திருக்கிறார் முன்னாள் நிதியமைச்சராகவிருந்த பசில் ராஜபக்ச. இதன் மூலம் இலைமறை காயாகவிருந்த ஒரு அரசியல் நாடகம் இப்போது அம்பலத்திற்கு வந்துள்ளது. யார் இந்த தம்மிக பெரேரோ? இவர் எப்படிப் பண முதலையானார்? ஒரு மாபெரும் பணக்காரனுக்கு, மோசமான நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கும் ஒரு நாட்டின் ஊழல் மிகுந்த அரசியலில் என்ன வேலை? இவருக்காக பசில் ஏன் பதவி துறக்க வேண்டும்?.. இவ்வாறு கேள்விகள் எழும்.

சூதாட்டத்தின் மூலம் விரைவுப் பணக்காரராகும் எண்ணம் கொண்ட தம்மிக தனது 22வது வயதில் தாய்வான் சென்று சூதாட்டக் கல்வி கற்றவர். ஒரு சில 'ஜாக்பாட்' (Jackpot) இயந்திரங்களுடன் ஆரம்பித்த அவரது வாழ்க்கை, பல்லாயிரக்கணக்கான குடும்பங்களின் அழிவில் பலநூறு சூதாட்ட இயந்திரங்களையும் நாடு முழுவதும் விரவிக் கிடந்த சூதாட்ட விடுதிகளையும் கொண்டு பல்கிப் பெருகியது. அப்போது அரசுக்கட்டில் இருந்த பிரேமதாச சூதாட்டத்தை தடை செய்தபோது, ஏற்கனவே பெரும் பணக்காரர் ஆகியிருந்தார் தம்மிக. சூதாட்டத் தடையின் போது கார் வியாபாரத்தில் கவனம் செலுத்தியவர், பிரேமதாசவின் மறைவின் பின் மீண்டும் சூதாட்டத்தின் ஏகப்பிரதிநிதியாக, கட்டுக்கு மீறிய பணம் கொண்ட பெரும்புள்ளி 'தாதா' தம்மிக ஆனார்.

ஒரு சூதாட்டக்காரனுக்கும் அரசியலில் இருக்கும் மாஃபியாக்களுக்கும் என்ன தொடர்பு என்று கேட்கிறீர்களா? அரசியல்வாதிகளுக்கும் வியாபாரிகளுக்குமிடையில் வெளித்தெரியாத பிணைப்புகள் ஏராளம் இருக்கின்றன. அரசியல்வாதியின் செல்வாக்கு, அதிகாரம், சட்டத்தை வளைக்கும் நெளிவு சுழிவுகள் என்பனவற்றைப் பயன்படுத்தி வியாபாரி வளர்கிறான். கறுப்புப் பணத்தை வெள்ளையாக்குவது, அரசியல்வாதிகளின் வெளியில் காட்ட முடியாத சொத்துக்களுக்கு பினாமியாக இருப்பது என்று பதிலுபகாரத்தை செய்கிறான் ஒரு வியாபாரி. இவ்வாறு தான் ராஜபக்சேக்கள் அதியுச்சத்தில் இருந்த காலத்தில் தம்மிக பெரேரோவும் மிகச் செல்வாக்குடன் இருந்தார். ராஜபக்சேக்களின் பினாமிகளில் தம்மிக முக்கியமான ஒருவர்.

முதலீட்டு சபையின் பணிப்பாளராகவும், போக்குவரத்து அமைச்சின் நிரந்தர செயலாளராகவும், இலங்கை பத்திரங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் பிரதிப் பணிப்பாளராகவும் இருந்தவர் தம்மிக. இந்தக் காலத்தில் நாமல் ராஜபக்ச தலைமை தாங்கிய இளைஞர் அமைப்பிற்கு முறைகேடாக 5 மில்லியன் ரூபா அரசுப்பணத்தை கைமாற்றியது தொடர்பாக 2015 இல் கைதானவர் இந்த தம்மிக. போக்குவரத்துச் சபையில் இவர் இருந்த காலத்தில் வாங்கிய பஸ் வண்டிகளுக்கு பணம் செலுத்தாமை, உதிரிப்பாகங்கள் வாங்கியதில் பாரிய ஊழல், சூதாட்ட விடுதிகளிற்கான அரச வரிப்பண ஏய்ப்பு, இங்கிலாந்திலிருந்து மருத்துவக் கழிவுகளை இலங்கையில் கொட்டி பணம் சம்பாதிக்க முயன்று மாட்டிக் கொண்டது என்று தம்மிகவின் குற்றப்பட்டியல் நீண்டு கொண்டே போகிறது.

பசில் ராஜபக்சவும் சாதாரணமானவர் இல்லை. இரட்டைப் பிரசாவுரிமை கொண்ட பசில் ஒரு முன்னைநாள் நிதியமைச்சர். மொட்டுக்கட்சியின் உருவாக்கத்திலும் தேர்தலில் அவர்கள் பெற்ற அமோக வெற்றியிலும் பசிலிற்கு பெரும் பங்குண்டு. பதவி விலகியவுடன் பசில் கொடுத்த செவ்வியிலும் ஒன்று தெளிவாகியுள்ளது. பதவியில் இல்லையே தவிர, கட்சியின் செயற்பாடுகளில் தான் தீவிரமாக ஈடுபடப் போவதாக அவர் கூறியிருக்கிறார். மறுபக்கம் கோத்தா. 'கோத்தா கோ கம' ஆரம்பித்து 65 நாட்களைக் கடந்துவிட்ட நிலையில், தொடர்ந்தும் ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. பட்டினிச் சாவுகள் வீழத் தொடங்கி விட்டன. எது எவ்வாறிருப்பினும், தனது பதவிக் காலம் முடியும் அடுத்த இரண்டாண்டுகளுக்கு தான் பதவி விலகப் போவதில்லை என்று திட்டவட்டமாகத் தெரிவித்திருக்கிறார் கோத்தா.

21ம் திருத்தச் சட்டத்தைக் கொண்டுவந்து கோத்தாவின் அதிகாரத்தைக் குறைக்க முயலும் ரணிலின் செயற்பாடுகளினால், இரட்டைப் பிரசாவுரிமை கொண்ட ராஜபக்ச குடும்பத்தினரில் சிலரின் அரசியலுக்கு ஆப்பு விழுந்துவிடும். வீழும் பொருளாதாரத்தை தட்டி நிமிர்த்தவே தம்மிக அரசியலுக்குள் வந்தார் என்று கூறப்பட்டாலும், அதிகரிக்கும் ராஜபக்ச எதிர்ப்பிலிருந்து அவர்களை காப்பாற்றி ரட்சிக்கவும், பொருளாதாரச் சிக்கலுக்கு தீர்வு வேண்டி நிற்கும் மக்களைச் சாந்தப்படுத்தவும் தம்மிகவின் வரவு அவர்களுக்குத் தேவைப்படுகின்றது. நாட்டைச் சூறையாடிய கும்பலில் இருந்து ஒருவருக்குப் பதிலாக இன்னொருவர் பதிலீடு செய்யப் பட்டிருக்கிறார். யார் கண்டது? பிரச்சனை தீவிரமடைந்து கோத்தா பதவி விலக நேர்ந்தால், தம்மிக ஜனாதிபதி தேர்தலில் வென்று, மறுபடியும் ராஜபக்சக்கள் அவரின் பின்னால் நின்று அரசியல் நடத்தும் காலம் வந்தாலும் வரும். திருட்டுக் கூட்டத்தை அடியோடு அழித்து, உண்மையாகவே தேசப்பற்றுக் கொண்ட இளையோர் அரசியலுக்கு வரும்போதுதான் மக்களுக்கு விமோசனம் கிடைக்க வாய்ப்புள்ளது.



பாரி

# மரணப்படுக்கையில் இலங்கைத் தீவு

இலங்கையின் அந்நிய செலாவணி கையிருப்பு சுத்தமாகக் காலியாகிவிட்ட நிலையில், ஏற்பட்டுள்ள கடுமையான அரசியல், பொருளாதார நெருக்கடிகள் மக்களை மீள முடியாதளவு வறுமையின் பிடிக்குள் தள்ளி விட்டுள்ளன. இந்த நிலை இலங்கைத் தீவிலுள்ள சுமார் 22 மில்லியன் மக்களில் 12% இற்கும் அதிகமானோரை வறுமைக் கோட்டின் கீழ் தள்ளியுள்ளதாகவும், மேலும் மில்லியன் கணக்கானவர்கள் உணவு, சுகாதாரம் மற்றும் வேலைக்கான பாதுகாப்பையும் உத்தரவாதத்தையும் இழந்து வருவதற்கு காரணமாகுவதாகவும் நிபுணர்கள் கவலை தெரிவித்துள்ளனர்.

உலக வங்கியின் செய்தித் தொடர்பாளர் பேசுகையில், ‘இடம் பெறும் பொருளாதார நெருக்கடியில், மனித வளர்ச்சியின் தாக்கம் மிகக் கடுமையானது’ என்றும், இந்த நெருக்கடி நிலைகள் குடும்பங்களின் அடிப்படை வாழ்வாதாரத்தை முழுமையாகச் சீர்குலைத்துவிடும்’ என்றும் கூறியுள்ளார். ‘குடும்பங்களில் ஊட்டச்சத்துக் குறைபாடு ஏற்படுவது தவிர்க்க இயலாததாகிவிடும்’ என்று அவர் அச்சம் தெரிவித்திருப்பதும் கவனிக்கத் தக்கது.



கடந்த ஏப்ரலில் 46% ஆகவிருந்த பணவீக்கம் இப்போது இன்னும் உச்சத்தைத் தொட்டிருக்கிறது. ஒரு முட்டையின் விலை வெறும் பத்து ரூபாயிலிருந்து அறுபது ரூபாயைத் தொட்டிருப்பது ஒரு சிறந்த உதாரணம். நாளாந்தம் வேலைசெய்து பிழைக்கும் மக்களின் அன்றாடச் சாப்பாட்டுக்கே திண்டாட்டம் என்ற நிலையில், மருந்துக்கும், மருத்துவ உபகரணங்களுக்கும் ஏற்பட்டுள்ள கடுமையான தட்டுப்பாடு உயிர்களைக் காவு கொள்ள ஆரம்பித்து விட்டது. இப்போது அரச ஊழியர்களுக்கு ஊதியம் கொடுக்கவும் பணமில்லாமல் அரசாங்கம் தள்ளாடுவதால், அரச ஊழியர்களும் வேலையிழக்கும் அபாயம் ஏற்பட்டுள்ளது. பல்லாயிரக் கணக்கானோர் நாட்டை விட்டுத் தப்பியோடுகின்றனர். எரிபொருளுக்காக மக்கள் நீண்ட வரையில் காத்திருப்பது போல் இப்போது கடவுச் சீட்டு எடுக்கவும் காத்துக் கிடக்கின்றனர்.

ஆபத்பாந்தவராகக் கருதப்பட்ட ரணில் எல்லாரிடமும் ஓடியோடி கடன் கேட்டுக் கொண்டிருக்கிறார். கப்பல்கள் வரிசை கட்டி நிற்பதாகவும், எரிபொருள் இறக்கப்பட்டு வருவதாகவும், இன்னும் இரு வாரங்களில் எரிபொருள் பிரச்சனை ஓரளவிற்கு நிவர்த்தியாகிவிடும் என்றும் பிரதமர் ‘பீலா’ விட்டு நான்கு வாரங்கள் கடந்து விட்டன. மக்கள் இன்னமும் எரிபொருளுக்கான வரிசையில் காத்திருந்து காத்திருந்து தம் வாழ்வைத் தொலைத்துக் கொண்டிருக்கிறார்கள்.

நாட்டின் பொருளாதாரச் சவால்களைச் சமாளிக்கும் அவசர கால நிதியாக மூன்று பில்லியன் டொலர்களை சர்வதேச

# மரணப்படுக்கையில் இலங்கைத் தீவு



நாணய நிறுவனத்திடம் கையேந்தி நிற்கிறது இலங்கை. ஏற்கனவே வெளிநாட்டு கடன் முதலீட்டாளர்களிடம் தான் பட்டிருந்த 50 பில்லியன் டொலர் கடனை தம்மால் கட்ட இயலாது என்று கைவிரித்து விட்டது இலங்கை. அதை விடவும் முக்கியமாக, பட்ட கடனுக்குக் கட்ட வேண்டிய வட்டித் தொகையான 78 மில்லியன் டொலர் பணத்தை முதற் தடவையாக கட்டத் தவறியதன் மூலம் இரண்டு மிக முக்கிய கடன் மதிப்பீட்டு முகவர்களின் நம்பிக்கையையும் இழந்துவிட்டது.

IMF எனப்படும் சர்வதேச நாணய நிறுவனத்திடம் கடன் பெறுவதற்காக தவமிருக்கும் இலங்கைக்கு இன்னமும் கடன் கிடைக்காமல் இருப்பதற்கு இது ஒரு முக்கிய காரணம். எல்லாவற்றிற்கும் மேல், பட்ட கடன்களை மறுசீரமைப்பதுடன், நீண்டகால பொருளாதார பலவீனங்களை நிவர்த்தி செய்யும் கட்டமைப்புகளை இலங்கை உருவாக்க வேண்டும் என உலக வங்கி எதிர்பார்க்கிறது. இது நிறைவேறும் வரை கடன் கிடைப்பது கடினம்தான். இதை விடவும், மார்ச்சில் உர இறக்குமதிப் பிரச்சனையால் இலங்கைக்குப் போடப்பட்ட தடை, தேயிலை ரப்பர் ஏற்றுமதிக்குத் தடையாக இருப்பதும் IMF இன் தீர்மானம் எடுக்காமைக்கு இன்னுமொரு காரணமாகிறது.

எது எப்படியிருப்பினும், இந்தியாவைத் தவிர வேறெந்த நாடும் இதுவரையில் ரணிலுக்கு உதவி செய்ததாகத் தெரியவில்லை. மனிதாபிமான அடிப்படையில் 16 மில்லியன் டொலர்களும் கடனாக 3.5 பில்லியன் டொலர்களும் தருவதாக உத்தரவாதமளித்துள்ளது இந்தியா. உரம், எரிபொருள் என கொஞ்ச உதவி இந்தியாவிடமிருந்து கிடைத்திருந்தாலும் அவையெல்லாம் ‘யானைப் பசிக்கு சோளப் பொரி’தான்.

இனிவரும் மூன்று வாரங்கள் மிகக் கடுமையானதாக இருக்கும் என்று பதவிக்கு வந்த நாளிலிருந்து பிரதமர் ரணில் கூறிக் கொண்டிருக்கிறார். அது பொய்யல்ல.

> **“இனிவரும் மூன்று வாரங்கள் மிகக் கடுமையானதாக இருக்கும் என்று பதவிக்கு வந்த நாளிலிருந்து பிரதமர் ரணில் கூறிக் கொண்டிருக்கிறார். அது பொய்யல்ல. 70 ஆண்டு காலத்தில் மக்கள் சந்திக்காதளவு பஞ்சத்தைத் தவிர்க்க, எரிபொருள் பிரச்சனைகள் அத்தனையையும் கடந்து, விவசாயிகள் வயலில் இறங்கி நெல் உற்பத்தி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர. பயிரிட்ட கதிர்களை அறுவடை செய்ய எரிபொருள் வேண்டி நிற்கும் விவசாயிகளுக்கு அதை வழங்காமல் வேறு முக்கியமற்ற இடங்களுக்கு எரிபொருளை வழங்கும் கூத்தும் இன்னுமொரு புறத்தில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.”**





# மரணப்படுக்கையில் இலங்கைத் தீவு

70 ஆண்டு காலத்தில் மக்கள் சந்திக் காதளவு பஞ்சத்தைத் தவிர்க்க, எரிபொருள் பிரச்சனைகள் அத்தனையையும் கடந்து, விவசாயிகள் வயலில் இறங்கி நெல் உற்பத்தி செய்ய வேண்டும் என்று கோரிக்கை விடுத்திருக்கிறார் விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர. பயிரிட்ட கதிர்களை அறுவடை செய்ய எரிபொருள் வேண்டி நிற்கும் விவசாயிகளுக்கு அதை வழங்காமல் வேறு முக்கியமற்ற இடங்களுக்கு எரிபொருளை வழங்கும் கூத்தும் இன்னுமொரு புறத்தில் அரங்கேறிக் கொண்டிருக்கிறது.

இவையெல்லாம் ஒருபுறமிருக்க, புதிதாக இரண்டு அமைச்சுகள் முளைத்திருக்கின்றன. தம்மிக பெரேரோ, பவித்திரா வன்னியாராய்ச்சி ஆகியோர் அவற்றை அலங்கரிக்க இருக்கிறார்கள். அமைச்சரவையை சிறிதாக்கி, பெரிதாக இருக்கும் நாட்டின் பொருளாதாரப் பிரச்சனையைத் தீர்த்து வைப்போம் என்று கூறி 'ரணில் விக்கிரமசிங்க'வைப் பதவியேற்றியதை இந்த நேரத்தில் மறுபடியும் ஞாபகமூட்ட நாம் கடமைப் பட்டுள்ளோம்.

அரசாங்கங்கள் மாறும்போதெல்லாம் தம்மில் பிரச்சனை எதுவும் இல்லாதது போலவும், சட்டத்தில்தான் சிக்கல் போலவும் காட்டிக் கொண்டு சட்டத்திருத்தம் செய்வதையும், அதை பாராளுமன்ற வாக்கெடுப்புக்கு விட்டு தமக்கு ஏற்றாற் போல் நடைமுறைப் படுத்துவதையும் இலங்கையின் ஆட்சியாளர்கள் ஒரு கலையாகவே கொண்டிருக்கின்றனர். 21ம் சட்டத் திருத்தத்தைக் கொண்டுவர முனையும் ரணிலும் இதற்கு விதிவிலக்கா என்ன?

'துப்புக் கெட்டவர்களுக்கு இரட்டை விருது' தமிழ் மக்களாவது விழிப்புடன் செயற்பட்டு தம்மைக் காத்துக்கொள்ள வேண்டும்.





தன்னை அறிந்தவன் ஆசைப்பட மாட்டான்.
உலகை அறிந்தவன் கோவப்பட மாட்டான்.
இந்த இரண்டையும் உணர்ந்தவன் துன்பப்பட மாட்டான்.

**பகவத் கீதை**



கோவம் என்பது
பிறர் செய்யும் தவறுக்கு
உனக்கு நீயே
கொடுத்து கொள்ளும் தண்டனை.

**புத்தர்**



வெற்றிகளை சந்தித்தவன் இதயம்
பூவை போல் மென்மையானது.
தோல்வி மட்டுமே சந்தித்தவன்
இதயம் இரும்பை விட வலிமையானது.

**விவேகானந்தர்**



தோல்வி உன்னைத்
துரத்துகிறது என்றால்,
வெற்றியை நீ நெருங்குகிறாய்
என்று அர்த்தம்.

**நெப்போலியன்**

அவ்வை



# ஜனாதிபதியை பதவி விலக்க என்ன செய்யவேண்டும்?

**21 வது சட்டத் திருத்தம் என்பது ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைத்து அதிகாரப் பரவல் செய்யும் ஒரு சட்டத் திருத்தமாகும். இந்தச் சட்டம் நிறைவேறுவதை ராஜபக்சர்கள் விரும்பப் போவதில்லை. ஒரு பலமான சட்டத்தை தமக்குச் சாதகமாக உருவாக்கி, அதனுள் அதிகாரக் கோலோச்சும் இவர்களால் அரைப் பட்டினியுடன் வீதியில் இறங்கிப் போராடும் மக்கள் இன்னும் என்னவெல்லாம் அனுபவிக்கப் போகிறார்களோ....?**

ஏப்ரல் 9 அன்று ஆரம்பமாகிய, ஜனாதிபதி கோத்தபாயவை பதவியை விட்டு வெளியேற நிர்ப்பந்திக்கும் 'கோட்டா கோ கம' போராட்டம் இன்றுவரை ஆக்ரோஷமாகத் தொடர்ந்து கொண்டிருக்கிறது. பதவிக் காலம் முடியும் வரை போக மாட்டேன் என்று பதவி நாற்காலியை இறுக்கிப் பிடித்து வைத்திருக்கிறார் கோத்தபாய. இலங்கையின் அதியுச்ச சட்டமான அரசியலமைப்புச் சட்டத்தின்படி.

**✸ ஜனாதிபதி இறந்தால்,**
**✸ தானே விலகிக் கொள்வதாக அவர் தன் கைப்பட எழுதிய கடிதத்தை சபாநாயகரிடம் கையளித்தால்,**
**✸ ஜனாதிபதி தன் குடியுரிமையை இழந்தால்,**
**✸ அவர் உடல், உள பாதிப்புக்குள்ளாகி தனித்து இயங்க முடியாமல் போனால்,**
**✸ தெரிவு செய்யப்பட்டு ஒரு மாத காலத்தினுள் பொறுப்பேற்காமல் போனால் மட்டுமே ஜனாதிபதி பதவி வெற்றிடமாகும்.**

அதிகாரங்கள் குவிந்து கிடக்கும் மையமாக இருக்கும் நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஒரு ஜனாதிபதியை, அதுவும் அவர் பதவியை விடமாட்டேன் என்று அடம்பிடிக்கும்போது பதவியிறக்குவது ஒன்றும் எளிதான காரியமல்ல. ஆதாரங்களைத் திரட்டி வைத்துக்கொண்டு ஒரு குற்றப் பிரேரணையை பாராளுமன்றில் கொண்டு வருவதன் மூலம் மட்டுமே இது சாத்தியமாகும்.





# ஜனாதிபதியை பதவி விலக்க என்ன செய்யவேண்டும்?

- ✱ ஜனாதிபதியின் தேசத்துரோகம்,
- ✱ அவரின் அதிகார துஷ்பிரயோகம்,
- ✱ தவறான நடத்தை,
- ✱ லஞ்சம், ஊழல்,
- ✱ தெரிந்தே அரசியலமைப்பை மீறி செயற்படுவது

போன்றனவற்றில் ஒன்றையாவது நிரூபிக்க வேண்டும். நிரூபித்த பின் அது நாடாளுமன்றில் பிரேரணையாக வரும்போது மூன்றில் இரண்டு பகுதியினர் அதை ஆதரித்துக் கையொப்பமிட்டு சபாநாயகரிடம் ஒப்படைக்க வேண்டும். சபாநாயகர் அதை ஏற்று நிகழ்ச்சி நிரலில் சேர்த்தால் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும். சபாநாயகர் ஏற்றுக் கொள்ளாவிட்டால் பிரேரணை தோற்றுப் போனதாகவே கொள்ளப்படும். விவாதம் நடைபெற்ற பின்னும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை இருந்தால் சபாநாயகர் அதை உயர் நீதிமன்றத்துக்கு அனுப்பி வைப்பார்.

உயர் நீதிமன்றத்தில் ஜனாதிபதியின் குற்றம் நிரூபணமானாலும் நீதிமன்றிற்கு அவரைப் பதவியிறக்கும் அதிகாரம் இல்லை. முடிவை நீதிமன்று சபாநாயகருக்குத் தெரிவிக்கும். சபாநாயகர் மறுபடியும் பாராளுமன்றில் விவாதத்திற்கு எடுப்பார். ஒரு இரகசிய வாக்கெடுப்பும் நடத்தப்படும். அந்த வாக்கெடுப்பிலும் மூன்றில் இரண்டு பெரும்பான்மை கிடைத்தால் 'ஜனாதிபதியின் பதவிக்கால இறுதி நாள்' தீர்மானிக்கப்படும். பதவி நீக்கத்தை சபாநாயகர் அறிவிப்பார். இரகசிய வாக்கெடுப்பில் மூன்றில் இரண்டு கிடைக்காவிட்டால் பிரேரணை தோற்றுப்போய் விடும்.

இவையனைத்தும் சாத்தியமாகாத பட்சத்தில், அடுத்து என்ன செய்யலாம்?

நிறைவேற்று அதிகார ஜனாதிபதி முறைமையை சட்டத்திருத்தம் மூலம் நீக்க வேண்டும். அதாவது ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட வேண்டும்.

அதன் பின்னர், நிதித்துறையை ஜனாதிபதியிடமிருந்து பாராளுமன்றம் பொறுப்பெடுக்க வேண்டும்.

பின்னர், பாராளுமன்றில் பிரேரணை கொண்டுவரப்பட்டு மூன்றில் இரண்டு பெரும்பான்மையுடன் பதவி விலகலைக் கோரலாம். அதற்கும் செவிசாய்க்காத பட்சத்தில், ஜனாதிபதி சேவை செய்வதற்குரிய நிதிவழங்கலைத் தடுக்கலாம். இதன் மூலம் அவர் பதவி விலக நிர்ப்பந்தம் கொடுக்கலாம்.

ஆக, பாராளுமன்றத்தின் பெரும்பான்மை எடுக்கும் தீர்மானம்தான் இங்கு முக்கியமானது.

21வது சட்டத் திருத்தம் என்பது ஜனாதிபதியின் அதிகாரத்தைக் குறைத்து அதிகாரப் பரவல் செய்யும் ஒரு சட்டத் திருத்தமாகும். இந்தச் சட்டம் நிறைவேறுவதை ராஜபக்சர்கள் விரும்பப் போவதில்லை. ஒரு பலமான சட்டத்தை தமக்குச் சாதகமாக உருவாக்கி, அதனுள் அதிகாரக் கோலோச்சும் இவர்களால் அரைப் பட்டினியுடன் வீதியில் இறங்கிப் போராடும் மக்கள் இன்னும் என்னவெல்லாம் அனுபவிக்கப் போகிறார்களோ..?





*தோல்விக்கு இரண்டு காரணம்.*
*ஒன்று*
*யோசிக்காமல் செய்வது*
*இரண்டு*
*யோசித்த பின்னும்*
*செய்யாமல் இருப்பது.*

**ஸ்ரீ கிருஷ்ணர்**



*நீ பட்ட துன்பத்தை விட*
*அதில் நீ பெற்ற அனுபவமே சிறந்தது.*

**விவேகானந்தர்**



*பெண்கள் இல்லை என்றால்*
*ஆண்களுக்கு ஆறுதல்*
*சொல்ல ஆள் இல்லை.*
*பெண்களே இல்லை என்றால்*
*ஆறுதலே தேவை இல்லை.*

**சார்லி சாப்பிளின்**



*விதைத்தவன்*
*உறங்கினாலும், விதைகள்*
*உறங்குவது இல்லை.*

**காரல் மாக்ஸ்**



மகிழ்

# எரியூட்டப்பட்ட யாழ். நூலகம்

ஒரு இனத்தை, அவர்கள் இருந்த தடயமே தெரியாமல் அழிக்க வேண்டும் என்ற குரோதமும், வன்மமும் கொண்ட எதிரி, எந்த எல்லை வரைக்கும் போவான் என்பதற்கு அடுத்தடுத்து தமிழ் மக்கள் மீது கட்டவிழ்த்து விடப்படும் வன்முறைகளே சான்று. மக்களைக் கூட்டம் கூட்டமாகக் கொன்று குவிப்பதை மட்டும் இனவழிப்பு என்று எடுத்துக் கொள்ள முடியாது. அம் மக்களின் கலை, கலாசாரத்தை சிதைப்பது, அவர்களின் வணக்க தலங்களை அழிப்பது, அம் மக்களின் பூர்வீக நிலங்களை அபகரித்து அவர்களை நாதியற்றவர்கள் ஆக்குவது, அவர்களின் தொன்மையான வரலாற்றுச் சான்றுகளை இல்லாதொழித்து முற்றாகவே ஒரு வரலாற்றை பொய்யானதாகக் காட்டுவது என்று ஒரு இனக் கருவறுப்பின் வடிவங்கள் தொடர்கின்றன. இந்த வகையில், 31/05/1981 அன்று நள்ளிரவில் அரங்கேற்றப்பட்ட யாழ் நூலக எரிப்பானது தமிழர் வரலாற்றில் ஒரு துன்பியல் வடுவாக அமைந்து விட்டது. இனவழிப்பின் உச்சமாகப் பதிவு செய்யக்கூடிய ஒரு போர்க் குற்றமாகவும் யாழ் நூலக எரிப்பு பார்க்கப்பட வேண்டும்.

யாழ் நூலகம் உருவாக காரணகர்த்தாவாக இருந்தவர் அச்சுவேலியைச் சேர்ந்த 'சக்கடத்தார்' செல்லப்பா அவர்கள். 1933 நவம்பர் 11 அன்று, தனது வீட்டில் ஒருசில நூல்களுடன் அவர் ஆரம்பித்த நூலகம், 1934 இல் யாழ் மத்திய கல்லூரியில் நடந்த ஒரு கூட்டத்தில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பின் பொது நூலகமாக மாற அடித்தளம் இடப்பட்டது.

சமூக ஆர்வலர்களினதும் பொதுமக்களினதும் அயராத உழைப்பு, வெளிநாட்டு உள்நாட்டு நிறுவனங்களின் தாராள உதவி என்பனவற்றுடன் யாழ் பொது நூலகத்திற்கு இடம் எடுக்கப்பட்டு புதிய கட்டடம் எழுப்பப்பட்டது. 1800கள் காலத்திய அரிய ஓலைச்சுவடிகள், கிடைத்தற்கரிய நூல்கள், வரலாற்றுச் சான்றுகள், ஆவணங்கள், நாளிதழ்கள். என்று கிடைத்தற்கரிய பொக்கிசங்களாக 97,000 இற்கும் மேற்பட்ட ஆவணங்கள் கொண்ட ஒரு பிரம்மாண்டமாக, தெற்காசியாவிலேயே ஒரு பெரிய நூலகமாக எழுந்த யாழ் நூலகம், தமிழர்களின் வரலாற்றுத் தொல்லியலை உலகிற்கு எடுத்தியம்பும் ஒரு மாபெரும் சான்றாக நிமிர்ந்து நின்றது.

திட்டமிட்ட ஒரு இனவழிப்பின் வெளிப்பாடாக, 31/05/1981 அன்று நள்ளிரவின் பின், சிங்கள அரச படைக் காடையர்களால் யாழ் நூலகம் எரியூட்டப்பட்டது. கிடைத்தற்கரிய பொக்கிசங்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகின. கருகிப்போன நூலகம்



# எரியூட்டப்பட்ட யாழ். நூலகம்



போல உலகெங்கிலும் இருந்த அத்தனை தமிழ் நெஞ்சங்களும் இருண்டு போயின. அப்போதைய சிங்கள அமைச்சரான 'காமினி திஸ்ஸ நாயக்க' நேரடிக் காரணகர்த்தாவாக இருந்து நூலகத்தை எரித்தார் என்ற உண்மை வெளிப்படையாக இருந்தும் எந்தச் சட்டமும் இந்த அரச பயங்கரவாதிகளைத் தண்டிக்கவில்லை.

இது ஒரு இனவழிப்புப் போர்க் குற்றம். சட்டத்தின் முன் கொண்டு வரப்பட்டு தண்டிக்கப்பட வேண்டிய குற்றம். சிங்கள அரசு இந்தப் போர்க்குற்றத்திற்கும் சேர்த்துப் பொறுப்பேற்க வேண்டும். வரலாற்றைத் திரும்பிப் பார்த்தால்..

போஸ்னியா [Bosnia] தேசத்தின் செரஜாவ் [Sarajevo] நகரை ஆக்கிரமித்து இருந்த சேர்பியா [Serbia] இராணுவத்தினர், 1992 ஆம் ஆண்டு ஆகஸ்ட் 25, 26 ஆம் திகதிகளில் போஸ்னிய பல்கலைக்கழக நூலகத்தை தீயிட்டுக் கொளுத்தினார்கள்.

ஏறத்தாழ இரண்டு மில்லியன் புத்தகங்கள், பழங்காலச் சுவடிகள், படங்கள் வைக்கப்பட்டு இருந்த மேற்படி நூலகம் சேர்பியா அரச படைகளால் முழுமையாக தீக்கிரையாக்கப்பட்டது.

இந்த கொடூர நிகழ்வு சேர்பியா நாட்டின் தலைவராக இருந்த Slobodan Miloaevi அவர்களுக்கு எதிராக பிற்காலத்தில் முன்வைக்கப்பட்ட சேர்பியர் அல்லாதோருக்கு எதிரான இனப்படுகொலை தொடர்பான குற்றச்சாட்டின் முக்கிய ஆதாரமாக சேர்க்கப்பட்டு இருந்தது. குறிப்பாக ஐக்கிய நாடுகள் சபை நிறுவிய International Criminal Tribunal for the Former Yugoslavia (ICTY) அமர்வில், 2003 ஆன் ஆண்டு ஜூலை 8 ஆம் திகதி சாட்சியமளித்த Harvard நூலகர் Andras Riedlmayer அவர்கள், தனது சாட்சியத்தில் சேர்பியா அரச படைகள் போஸ்னியா பல்கலைக்கழக நூலகத்தை தீயிட்டு எரித்தமையை போஸ்னியா தேசம் மீதான இனப்படுகொலையின் பிரதான ஆதாரமாக பதிவு செய்து இருந்தார்.

அதே நேரம் தீயிட்டு அழிக்கப்பட்ட போஸ்னிய பல்கலைக்கழக நூலகம் ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியோடு சீரமைக்கப்பட்டு, அதன் வாயிலில், 'சேர்பியா நாட்டு படைகளால் நூலகம் அழிக்கப்பட்டது தொடர்பான நினைவு கல்'திறந்து வைக்கப்பட்டு இருக்கின்றது.

குறித்த நினைவு கல்லில் 'Do not Forget , Remember and Warn' என பதிவு செய்து வைத்து இருக்கின்றார்கள்.

யாழ் நூலக எரிப்பிற்கும் பொஸ்னிய நூலக எரிப்பிற்கும் இடையில் வேறுபாடில்லை. சேர்பியர்களை போர்க் குற்றவாளிகள் என்று ஏற்றுக் கொண்ட உலகத்தின் முன்னால், சிங்கள தேசத்தையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டும். எங்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். உலகின் வரலாற்றுப் பாடங்கள் எங்களுக்கு ஒரு வழிகாட்டியாக அமையட்டும். ஒன்றிணைந்த சக்தியாக நாம் நிமிர்ந்து நிற்போம்.

**திட்டமிட்ட ஒரு இனவழிப்பின் வெளிப்பாடாக, 31/05/1981 அன்று நள்ளிரவின் பின், சிங்கள அரச படைக் காடையர்களால் யாழ் நூலகம் எரியூட்டப்பட்டது. கிடைத்தற்கரிய பொக்கிசங்கள் அனைத்தும் எரிந்து சாம்பலாகின. கருகிப்போன நூலகம் போல உலகெங்கிலும் இருந்த அத்தனை தமிழ் நெஞ்சங்களும் இருண்டு போயின. அப்போதைய சிங்கள அமைச்சரான 'காமினி திஸ்ஸநாயக்க' நேரடிக் காரணகர்த்தாவாக இருந்து நூலகத்தை எரித்தார் என்ற உண்மை வெளிப்படையாக இருந்தும் எந்தச் சட்டமும் இந்த அரச பயங்கரவாதிகளைத் தண்டிக்கவில்லை.**



# பெற்றோர், ஆசிரியர்களின் உடனடிக் கவனத்திற்கு!!

**இருண்டு போகும் இளைய சமுதாயத்தின் நிலை குறித்து ஒரு வைத்தியரின் பதிவு...**




இருள் மயமான எதிர் காலம் நம் கண் முன்னால்...

**சுபனி கொழும்பில் ஒரு முன்னணி சர்வதேச பாடசாலையில் எட்டாம் வகுப்பில் உள்ள மாணவி.**

‘பாடசாலையில் நாங்கள் ஒரு கலை நிகழ்ச்சியை நடத்தினோம், ஒரு சீனியர் அக்கா ப்ரொவ்னி [போதை மாத்திரையின் குழுக் குறியீடு]களை அங்கு விற்பனை செய்தார். என் நண்பர்கள் அதை ட்ரை பன்ன எனக்கு உதவினார்கள். நான் முதன்முதலாக போதை மருந்து களை உபயோகித்தேன், ஆரம்பத்தில் வெறுப்பாக இருந்தது. எனினும், அதைத் தொடர்ந்து பாவித்தால் எல்லாம் சரியாகிவிடும் என்று நண்பர்கள் நம்பிக்கை ஊட்டினர். உண்மையிலேயே போகப் போக நன்றாக இருந் தது, அதன் பின் ‘ஆப்பிள்’ ஓபியோட் போதை மாத்திரை [Tramadol Tablet] யின் தெருப் பெயர் பாவிக்க தொடங்கினேன், அது எங்களது பாடசாலையில் மிகவும் பிரசித்தமானது. நான் அதை நன்றாக உணர்ந் தேன். அது ஒரு சில மணி நேரங்களுக்கு நல்ல மகிழ்ச்சியை தந்தது. ஆனால், அடிக்கடி தேவைப்பட்டது. ஆனால், இறுதியில் விளைவுகள் மோசமாகின. மனச்சோர்வும் கவலையும் மாத்திரமே எஞ்சியிருந்தன. என்னால் படிக்க முடியவில்லை.

செரீனா வயது 16. நான் பார்ட்டிகளுக்கு நண்பர்களுடைய வீடுகளுக் குச் செல்வேன், அவர்கள் அனைத்து வகையான சாராயம் உள்ளிட்ட எல்லாவிதமான போதைப் பொருள்களையும் வைத்திருப்பார்கள். அவர் கள் எல்லோரும் அதை பயன்படுத்துவார்கள், அது எனக்கு ஆசையை தூண்டியது. அங்கே ‘மோலி’ [MDMA / எக்ஸ்டஸி எனும் போதைப்பொருளின் சுருக்கப் பெயர்] ஏராளமாக கிடைத்தது. ஆரம்பத்தில் கட்டுப்பாட்டுடன் உபயோகித்தேன், இதில் நான் பிரச்சினை இருப்பதாக உணர்ந்ததில்லை,





ஏனெனில் வீட்டில் தந்தை அடிக்கடி புகைப்பிடிப்பதைப் பார்த்திருக்கிறேன். அது கவலையை நீக்கியது, ஆற்றலை அதிகரித்தது. அதை பாவிப்பது ‘ஃபன்’ (fun) னாக இருந்தது. ஆயினும் இரண்டு வருடங்களுக்குள் கிட்டத்தட்ட ஒவ்வொரு நாளும் போதைப்பொருட்களைப் பயன்படுத்தும் நிலை ஏற்பட்டது. நான் எக்ஸ்டஸி நிறைய பயன்படுத்திய போது பசியே இல்லாமல் போனது, அரிதாகவே சாப்பிட்டேன், உடம்பில் சக்தி இல்லை, உடல் இளைத்தது, கடைசியில் ஐந்து நிமிடத்திற்கும் மேலாக ஒரு புத்தகத்தின் முன் உட்கார முடியவில்லை’.

இலீனா கொழும்பில் ஒரு பிரபலமான பாடசாலையில் கற்கும் ஒரு மேல் தட்டு மாணவி. ஏழாம் வகுப்பிலிருந்து ஏறத்தாழ அவளது வகுப்பு தோழிகள் எல்லோரும் போதைபொருட்களை பாவிப்பதாக சொல்கிறாள். உண்மையில் பெரும்பாலான தோழிகள் வகுப்பறைகளில் கூட இந்த மாத்திரைகளை பாவித்த நிலையில் தான் இருப்பார்கள். ஆனால் ஆசிரியர்கள் கூட இது பற்றி கவனிக்கவில்லை என்கிறாள் அவள். (ஏனெனில் இவைகள் நாம் நினைப்பது போல போதை மயக்கத்தை ஏற்படுத்துவது இல்லை).

‘இந்தப் போதை மருந்துகளை வாங்குவது கடினம் அல்ல. என் நண்பர்கள் பெரும்பாலும் ரியுஸன் வகுப்பு வகுப்புகளைத் தவிர்க்கிறார்கள், அந்த பணத்தை இவைகளுக்கு பயன்படுத்துகிறார்கள். சிலர் தங்கள் பெற்றோரிடம் வேறு காரணங்களை கூறி பணத்தை எடுத்துக் கொள்கிறார்கள். இன்னும் சில தோழிகள் யாருக்கும் தெரியாமல் தங்களது வீட்டு தோட்டத்தில் அல்லது மொட்டை மாடியில் இருந்து தங்களது சொந்த பாவனைக்கான கஞ்சாவை (கன்னாபீஸ்) சாகுபடி செய்து கொள்கின்றனர். பலர் நண்பர்களிடமிருந்து அடிக்கடி தேவையான கஞ்சாவை, டிராமாடோலை இலவசமாக அல்லது கடனுக்கு பெறுகின்றனர்,

**போதைப்பொருள் பாவனையானது மிக ஆபத்தானது. இது குறித்து ஒவ்வொரு பெற்றோரும் ஆசிரியர்களும் மூத்தவர்களும் மிகவும் அவதானமாக இருப்பது காலத்தின் கட்டாயத் தேவையாக இருக்கின்றது. போதைப்பொருள் பாவனையை ஆரம்ப நிலைகளில் கட்டுப்படுத்தல் மாத்திரமே மிகச் சிறந்த விளைவுகளை தரவல்லது.**

**போதைப் பொருளை நோக்கிய பாதையை விட்டும் அல்லது அதை நாடுவதை விட்டும் நமது குழந்தைகளை காப்பாற்றுவதும், அந்த கொடிய வலையில் விழாமல் தொடர்ந்து வைத்திருப்பதும் நமது ஒவ்வொருவரினதும் கடமையாக இருக்கின்றது.**

இதற்காக அண்டை வீட்டாரை அல்லது ஒரு ஒரு முச்சக்கரவண்டி ஓட்டுநரைப் பயன்படுத்துகின்றனர். அதே நேரத்தில் எக்ஸ்டாசி, அப்பிள் போன்றவை பார்ட்டிகள் மற்றும் நடனங்கள், கேளிக்கைகளின் போது எளிதாக கிடைக்கின்றன. மருந்துகள் கிடைப்பது எளிது, ஆனால் பணம் எனக்கு கிடைப்பது தான் அவ்வளவு சுலபமல்ல’ என்று அவளே ஒப்புக்கொள்கிறாள்.

மேலே உள்ள உண்மைச் சம்பவங்கள், போதைப் பொருட்கள் சட்டவிரோதமாக இருப்பினும் பாடசாலை மாணவர்களுக்கு எவ்வளவு எளிதில் அணுகக்கூடியதாகக் காணப்படுகின்றன, இதன் பாவனை சமூகத்தில் எந்தளவுக்கு ஊடுருவி உள்ளது என்பதற்கான சிறு உதாரணங்கள் மாத்திரமே. ஒரு காலத்தில் ஆண்களிடமும், நகர்ப்புறங்களிலுமே காணப்பட்ட இந்தப் போதைப் பழக்கம் இப்போது பெண் பிள்ளைகளிடமும், கிராமங்களிலும் பரவி வருவது தான் இதன் பயங்கரத்தை விளக்கப் போதுமானது. ஏனெனில் அனைத்து போதை மருந்துகளின் விநியோகத்திற்கான நெட்வொர்க்குகளும் மிகவும் சுறுசுறுப்பாக உள்ளன, அரசியல் ஆதரவு தாராளமாக கிடைக்கின்றது. சோர்ஸிங் செய்வதற்கு சமூக ஊடகங்கள் ( Facebook, Whats App,Viber, e business sites) ஒரு பெரிய வழியில் பங்களிக்கிறன. இலங்கையில் நடைபெறுகின்ற பேஸ்புக் மூலம்



ஒழுங்கு செய்யப்படும் பார்ட்டிகள், இவைகளுக்கான ஆள் சேர்ப்புக்கும், போதைப்பொருள் பாவனைக்குமான நல்ல களமாக அமைந்து விடுகின்றன. அதே போல போதை பாவிப்பவர்களே தங்கள் சொந்தப் பயன்பாட்டிற்கு நிதி பெறுவதற்கு அதன் வாடிக்கையாளர்களாகவும், விற்பனையாளர்களாகவும் இருக்கின்றனர். போதைப்பொருள் தயாரிப்பு , கடத்தல், பரிமாற்றம், விற்பனை, அதன் துணைச் சேவைகள், நெட்வொர்க்குகள் மிகவும் இரகசியமான பரகசியமானவை (open secret ). அவை மிகவும் சுவாரஸ்யமானவை. ஒரு புத்தகம் எழுதுமளவுக்கான ஏராளமான தகவல்களையும் தரவுகளையும் கொண்டவை.

பொதுவாக, ஆப்பிள், மோலி மற்றும் கிரிஸ்டல் மேத், அய்ஸ் ( Apple, Molly, Crystal Meth, Ice) போன்ற போதை மருந்துகள் மாணவர்களால் பயன்படுத்தப்படுகின்றன. இது அவர்களின் பொருளாதார நிலைக்கு ஏற்ப மாறுபடுகிறது. உதாரணமாக, பாவா, மாவா மற்றும் ஹான்ஸ்,



கஞ்சா [Bawa, Mawa, Cannabis and Hans] போன்ற புகையிலை சார் பொருட்களின் பாவனை குறைந்த வருமானம் கொண்ட குழுக்களில் கடந்த சில ஆண்டுகளில் அதிகரித்து வருகின்றது, அது போல கோகேயின், எக்ஸ்டஸி மற்றும் கிறிஸ்டல் மெத் [cocaine, Ecstasy and Crystal meth] போன்ற விலை உயர்ந்த மருந்துகள் பணக்காரப் பிள்ளைகளால் உபயோகிக்கப்படுகின்றன. 'ஆப்பிள்' என அறியப்படும் வலி நிவாரணியான டிராமாடோலின், மற்றும் கேரள கஞ்சா ஆகியவற்றின் பாவனை ஏழை, பணக்கார வேறுபாடு இன்றி மாணவ மாணவிகளிடம் வேகமாக வளர்ந்து வரும் மற்றொரு போதை பொருளாக அடையாளம் காணப்பட்டுள்ளது. இது நகர்ப்புறம், கிராமம் என வேறுபாடின்றி வியாபித்து வருகின்றது.

புறநிலை அழுத்தம், நண்பர்களின் ஊக்குவிப்பு, சமூக ஊடகங்களின் தாக்கம், மற்றும் தனிப்படும் பயம் [loneliness], குறைந்த சுயமரியாதை [low self esteem] , பிரிந்த குடும்ப கட்டமைப்பு [Broken family] அல்லது செயலிழந்த சமூக அமைப்பு [Dysfunctioning society] என்பன இந்த போதை பயன்பாட்டிற்கு காரணிகளாக இருக்கின்றன.




போதைப்பொருள் பாவனையானது மிக ஆபத்தானது. இது குறித்து ஒவ்வொரு பெற்றோரும் ஆசிரியர்களும் மூத்தவர்களும் மிகவும் அவதானமாக இருப்பது காலத்தின் கட்டாயத் தேவையாக இருக்கின்றது. போதைப்பொருள் பாவனையை ஆரம்ப நிலைகளில் கட்டுப்படுத்தல் மாத்திரமே மிகச் சிறந்த விளைவுகளை தரவல்லது. போதைப் பொருளை நோக்கிய பாதையை விட்டும் அல்லது அதை நாடுவதை விட்டும் நமது குழந்தைகளை காப்பாற்றுவதும், அந்த கொடிய வலையில் விழாமல் தொடர்ந்து வைத்திருப்பதும் நமது ஒவ்வொருவரினதும் கடமையாக இருக்கின்றது. போதை பொருளுக்கு அடிமையாகி விட்டால் அதன் பின் அதிலிருந்து மீட்டு எடுப்பது என்பது சிரமமான காரியமாகவே காணப்படுகிறது. ஆகவே வருமுன் காப்பதே நம் முன்னால் உள்ள மிகச் சிறந்த கடமையாக இருக்கிறது.

**Dr PM. Arshath Ahamed**
**MBBS, MD PEAD**
**குழந்தை நல மருத்துவ நிபுணர்,**
**ஆதார வைத்தியசாலை,**
**சம்மாந்துறை.**



*யார் என்ன சொன்னாலும்*
*உன் கொள்கையை மாற்றி கொள்ளாதே.*
*ஒரு சமயம் நீ மாற்றினால்,*
*ஒவ்வொரு முறையும் நீ மாற*
*வேண்டி இருக்கும்.*

**கண்ணதாசன்**



*வாழ்கையில் வெற்றி பெற*
*வேண்டுமானால்*
*நல்ல நண்பர்கள் தேவை.*
*வாழ்நாள் முழுவதும்*
*வெற்றி பெற வேண்டுமானால்*
*ஒரு எதிரியாவது தேவை.*

**A .P . J . அப்துல்கலாம்**



*ஜெயிப்பது எப்படி என்று*
*யோசிப்பதை விட*
*தோற்பது எப்படி என்று*
*யோசித்துப் பார் - நீ*
*ஜெயித்து விடுவாய்.*

**ஹிட்லர்**



*அவமானங்களை சேகரித்து வை,*
*வெற்றி உன்னை தேடி வரும்.*

**A .R .ரகுமான்**

# போதைக் கலாசாரத்தால் மீண்டும் ஒரு மரணம்!!

அண்மையில் முழு நாட்டையும் சோகத்தில் ஆழ்த்திய சம்பவமொன்று பதிவானது. அதுதான் சின்ன இளஞ்சிட்டு ஆயிஷாவின் மரணமாகும். பண்டாரகம, அட்டுலுகம பிரதேசத்தில் வசித்துவரும் ஆயிஷா கடந்த 27ம் திகதி காலை 10 மணியளவில் வீட்டிலிருந்து கோழி இறைச்சி வாங்குவதற்காக கடைக்குச் சென்றிருந்தாள். ஒரு மணி நேரம் கடந்தும் பிள்ளையைக் காணாததால் தாய் துடிதுடித்துப் போனாள். பின்னர் தனது உறவினர்களிடம் விடயத்தைக்கூறி தேடுதல் மேற்கொண்ட போதும் பலனளிக்கவில்லை. என்ன செய்வதென்று தெரியாமல் இறுதியாக பண்டாரகம பொலிஸ் நிலையத்தில் முறைப்பாட்டை பதிவு செய்தனர். அதன்பின்னர் கிராம மக்களும் பொலிஸாரும் இணைந்து தேடுதல் மேற்கொண்டபோது மறுநாள் அதாவது 28 ஆம் திகதி மாலை வீட்டிலிருந்து சுமார் 150 மீற்றர் தூரமளவில் காணப்பட்ட காட்டுப்பகுதியில் சதுப்பு நிலப் பகுதியில் ஆயிஷாவின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டது. இந்தச் சிறுமிக்கு என்ன நடந்தது என்பதை விரிவாகப் பார்ப்போம்.

அட்டுலுகம அல் – கஸ்ஸாலி மகா வித்தியாலயத்தில் 4 ஆம் தரத்தில் கல்வி கற்றுவந்த ஆயிஷா, குடும்பத்தில் மூன்றாவது பிள்ளையாவாள். இவளின் மரணத்துக்கு காரணமான சந்தேகநபர் இவர்களின் சொந்தக்காரர் எனவும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சந்தேகநபரை அட்டுலுகம முஸ்லிம் கொலனியில் வைத்து விசாரணைக் குழுவினரால் கடந்த 30ம் திகதி கைதுசெய்ய முடியுமாயிற்று. இவர் கூலி வேலை செய்து அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வந்தவர் என பொலிஸார் தெரிவித்தனர். மொஹமட் பாருக் என்ற 29 வயதுடையவரே சந்தேகநபராவார். இவர் 3 பிள்ளைகளின்





மாலினி மோகன்

**இளஞ்சிட்டு இவ்வுலகை விட்டுச் சென்றுவிட்டது. சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டான். இவன் சார்பில் எந்தவொரு சட்டத்தரணியும் மன்றில் ஆஜராகவில்லை. எனினும் ஒருசில நாட்களில் பிணையில் வெளியே வரத்தான் போகின்றான். மீண்டும் போதைப்பொருளுக்கு அடிமையாகி இன்னொரு சிறுமியின் உயிரை காவுகொள்வதற்கு முன் கடுமையான சட்டங்கள் நாட்டில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் பொதுமக்களின் ஒரே கோரிக்கையாக இருக்கின்றது.**


தந்தையென பொலிஸார் தெரிவித்ததோடு, அவனது மனைவி மீண்டும் கருவுற்றிருந்ததாகவும் தெரிவித்தனர். சந்தேகநபர் போதைவஸ்து பாவனைக்கு அடிமையானவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயிஷா கடைக்குச் சென்றுவிட்டு மீண்டும் வீடு திரும்பும் காட்சி அருகிலுள்ள சி.சி.ரி.வி. கமராவில் பதிவாகியுள்ளமையும் அறியமுடிந்தது. இவ்வாறு திரும்பிக்கொண்டிருக்கையிலேயே சிறுமி கடத்தப்பட்டுள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது. சிறுமியை காட்டுப்பகுதிக்குள் இழுத்துச்சென்ற பாருக், அவளை உடல் ரீதியாக துன்புறுத்தியுள்ளான். எதுவும் அறியாத சிறுமி, கூக்குரலிடத் தொடங்கினாள். அவள் சத்தமிட்டதும் பயந்துபோனவன் துணியொன்றினால் அவளது வாயைப் பொத்தி சதுப்பு நிலத்தில் தள்ளி அவளது முதுகின் பின்னால் தனது முழங்காலை வைத்து அழுத்தினான். அதன்காரணமாக மூச்சுத் திணறி அவ்விடத்திலேயே அவள் உயிர் பிரிந்துள்ளதாக விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சிறுமியின் சடலம் கண்டுபிடிக்கப்பட்டவுடன் அவ்விடத்தை 1000க்கும் மேற்பட்ட பொதுமக்கள் சூழ்ந்துகொண்டதாகவும் அதனால் பல சாட்சியங்களை தாங்கள் இழந்துவிட்டதாகவும் விசாரணைக் குழுவினர் தெரிவித்தனர். எது எவ்வாறிருப்பினும் சந்தேகநபரால் சிறுமி துஷ்பிரயோகத்துக்குள்ளாகி இருக்கவில்லை என பொலிஸார் தெரிவித்தனர். ஆயிஷாவின் பிரேத பரிசோதனை நீதிமன்ற வைத்தியர்கள் மூவரின் ஒத்துழைப்புடன் பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் இடம்பெற்றது. இந்தப் பரிசோதனையின் அறிக்கை வெளிவர முன்னரே பொலிஸார் சந்தேகநபரை கைதுசெய்திருந்தமை விசேட அம்சமாகும். சம்பவம் இடம்பெற்ற தினத்தில் சந்தேகநபர் அணிந்திருந்த ஆடைகளையும் பொலிஸார் கைப்பற்றியிருந்தனர். 5 பொலிஸ் குழுக்கள் இணைந்து தீவிர விசாரணைகளை மேற்கொண்டதில் சம்பவம் தொடர்பில் சிறுமியின் உறவினர் ஒருவர் உட்பட நால்வரிடம் மேற்கொண்ட நீண்ட விசாரணையின் பின்னர் அவர்களில் இருவரிடம் வெவ்வேறாக மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின்போது சம்பவம் தொடர்பிலான முழு விபரமும் வெளிவரத் தொடங்கியுள்ளது.

பிரதான சந்தேகநபர் பொலிஸ் மற்றும் பொதுமக்களுடன் இணைந்து ஆயிஷாவைக் கண்டுபிடிக்க ஒத்துழைப்பு வழங்கியதுடன், அவனது நடவடிக்கைகளை கூர்ந்து அவதானித்த பொலிஸார், அவனை தனியாக அழைத்துச் சென்று விசாரணை செய்ததில் அனைத்து உண்மைகளும் வெளிவந்தன. சிறுமி கடைக்குச் சென்றுவிட்டு வீடு திரும்புகையில் கடத்தப்பட்ட நிலையில் காட்டுப்பகுதிக்கு அழைத்துச்சென்று உடல் ரீதியாக துன்புறுத்தப்பட்டாள். அவனது பிடியிலிருந்து தப்பித்துக்கொள்ள முயன்ற சிறுமியை வாயைப் பொத்தி மேலும் சில தூரத்துக்கு இழுத்துச் சென்றதாகவும் தெரிவிக்கப்பட்டது. அதன்பின்னரே சதுப்பு நிலத்தில் தள்ளி காலால் அழுத்தியுள்ளான் என விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் பண்டாரகம பொலிஸ் தலைமையதிகாரி பொலிஸ் பரிசோதகர் ஆர்.சீ.ராஜபக்ச தெரிவிக்கையில், சடலத்தை பிரேத பரிசோதனை செய்த வைத்தியர்கள், ஆயிஷாவின் உடலை வெட்டி பரிசோதனை மேற்கொண்டதன் பின்னர், சதுப்பு நிலத்தில் அழுத்தப்பட்டதால் மூச்சுத்திணறி இறந்துள்ளதாகத் தெரிவித்தனர். நீரில் மூழ்கியிருந்தில் சிறுமியின் நுரையீரலுக்குள் சேறு போனமையால் சுவாசிக்க முடியாமல் இறந்துபோயிருக்கிறாள் என



அறிக்கையில் வைத்தியர்கள் குறிப்பிட்டுள்ளதாக பொலிஸ் பரிசோதகர் மேலும் தெரிவித்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் என்ன காரணம் கூறப்பட்டாலும் இளஞ்சிட்டு இவ்வுலகை விட்டுச் சென்றுவிட்டது. சந்தேகநபர் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டான். இவன் சார்பில் எந்தவொரு சட்டத்தரணியும் மன்றில் ஆஜராகவில்லை. எனினும் ஒருசில நாட்களில் பிணையில் வெளியே வரத்தான் போகின்றான். மீண்டும் போதைப்பொருளுக்கு அடிமையாகி இன்னொரு சிறுமியின் உயிரை காவுகொள்வதற்கு முன் கடுமையான சட்டங்கள் நாட்டில் அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதுதான் பொதுமக்களின் ஒரே கோரிக்கையாக இருக்கின்றது. இது தொடர்பில் ஜனாதிபதியும் நீதியைப் பெற்றுத் தருவதாகக் கூறியிருக்கிறார். பல இடங்களில் ஆயிஷாவுக்கு நீதி கோரி ஆர்ப்பாட்டங்களும் இடம்பெற்று வருவதை காணக்கூடியதாக இருக்கிறது.

ஆயிஷாவின் இறுதிச்சடங்கு கடந்த 30 ஆம் திகதி பாணந்துறை ஆதார வைத்தியசாலையில் மேற்கொள்ளப்பட்ட பிரேத பரிசோதனையின் பின்னர் அன்றைய தினம் இரவே குடும்பத்தாரிடம் ஒப்படைக்கப்பட்டது. பின்னர் வீட்டுக்கு எடுத்துச் செல்லப்பட்ட சடலம் சிறிது நேரம் அங்கு வைக்கப்பட்டு அட்டுலுகம பெரிய பள்ளிவாசலில் சமயச் சடங்குகள் மேற்கொள்ளப்பட்டு அங்குள்ள பொது மயானத்தில் நல்லடக்கம் செய்யப்பட்டது.

# பெண்களும் சமூக வலைத்தளங்களும்



ஜெ.செந்துஜா

இன்றைய காலத்தை பொறுத்த வரைக்கும், படிப்பறிவான பெண்கள் அதிகளவில் நம் சமூகத்தில் இடம் பிடித்துள்ளனர். இணைய உலகில் நாம் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இன்று அதிகளவிலான சமூக வலைத்தளங்களான ரிக்ரொக், முகநூல் மற்றும் இது போன்ற ஏனைய பல வலைத்தளங்கள் நம்மோடு ஒன்றித்தவையாகி விட்டன. அதிலும் குறிப்பாக பெண்கள் இவற்றுக்கு முக்கியத்துவம் கொடுத்து வருவதை பல சமூக தாக்கங்களின் ஊடாகக் கண்டு கொண்டிருக்கிறோம். பொதுவாக வயது வரம்பின்றி, ஓய்வு நேரம் தவிர்ந்த மற்ற நேரத்தின் பெரும்பங்கை இந்த வலைத் தளங்களைப் பார்ப்பதிலேயே தம்மை ஈடு படுத்திக் கொண்டிருக்கின்றனர் என்பது வெளிப்படை.

முகநூலிலும் சரி, ரிக்ரொக்கிலும் சரி, நேரலை என்ற பொத்தானை அழுத்தி இரவு பகல் பாராது எம் பெண்கள் நேரத்தை செலவிடுகிறார்கள். தமது புகைப்படங்களையும் பதிவேற்றி வருகின்றனர். இதனால் பாரிய பின் விளைவுகள் ஏற்பட நிறைய சந்தர்ப்பங்களை அவர்களே ஏற்படுத்திக் கொடுத்து விடுகின்றனர். தவறான இணையத்தள பாவனையினால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளும் அவற்றிற்கான எச்சரிக்கைகளும் நாளாந்த பத்திரிகைகளிலும் செய்திகளிலும் காணக் கூடியதாக இருக்கிறது. இருந்தும் கைபேசியும் கையுமாக அலையும் பெண்களின் ஒரு பகுதியினர் மீண்டும் மீண்டும் இவ்வாறான நாசவலைக்குள் அகப்பட்டு விடுகின்றனர். இவர்கள் இதைப் புரிந்து செய்கின்றனரா அல்லது அசட்டுத் துணிச்சலுடன்


செயற்படுகின்றார்களா எனத் தெரிய வில்லை. யார், என்ன என்று தெரியாத முகமறியாத மனிதர்களை முகநூலில் நம்பி வீதிக்கு வந்த பெண்கள் ஏராளம். ஏராளம்.

அனைத்துப் பெண்களையும் குறை கூறி சுட்டிக் காட்ட முடியாது. ஒரு சில பெண் களே இவ்வாறான பாதிப்புக்கு உள்ளாகி றார்கள். நம் பெண்கள் சாதிக்க வேண்டிய தருணங்களும் துறைகளும் நிறையவே உள்ளன. எனவே பெற்றோர்களும் சிறிது கவனமெடுத்து அதிக நேர தொலைபேசி பாவனைகளை தடை செய்வதன் மூலம் இவ்வாறான அழிவில் இருந்து தம் பெண் பிள்ளைகளைப் பாதுகாத்துக் கொள்ள லாம். சிறிது சிந்தித்து விழித்து கொண் டால் இத்தகைய சமூக வலைத்தளங்களில் மூழ்கிக் கிடக்கும் பெண்களும் தம்மைப் பாதுகாத்துக் கொள்வார்கள். இதற்கு பெண்கள் சமூகவலைத்தளங்களை பாவிக்கக் கூடாது என்று அர்த்தமில்லை. நமது பாதுகாப்பிலும் நமது குடும்பத்தின் பாதுகாப்பிலும் கூடிய கவனம் எடுக்க வேண்டும், தொழில்நுட்ப வளர்ச்சியில் இருக்கும் பாதகங்களையும் புரிந்து செயற் பட வேண்டும் என்பதே இந்தக் கட்டுரை யின் நோக்கமாகும்.

அதை சரியான முறையிலும் தேவைக்கு ஏற்பவும் பயன்படுத்த வேண்டும். பெண் களே! பொழுதெல்லாம், இத்தளத்தில் நேரத்தை வீணடிக்காது சாதித்து காட் டுங்கள். நம்மால் உருவான சமுதாயம் மேலும் வளரட்டும். வீரப் பெண்களால், பார் போற்றும் மங்கையரால் ஓர் உன்னத சமுதாயத்தைக் கட்டியெழுப்ப முடியும். நாமும் ஓர் உதாரணமாகத் திகழ்வோம்.




**முகநூலிலும் சரி, ரிக்ரொக்கிலும் சரி, நேரலை என்ற பொத்தானை அழுத்தி இரவு பகல் பாராது எம் பெண்கள் நேரத்தை செலவிடுகிறார்கள். தமது புகைப்படங்களையும் பதிவேற்றி வருகின்றனர். இதனால் பாரிய பின் விளைவுகள் ஏற்பட நிறைய சந்தர்ப்பங்களை அவர்களே ஏற்படுத்திக் கொடுத்து விடுகின்றனர். தவறான இணையத்தள பாவனையினால் பெண்களுக்கு ஏற்படும் பிரச்சனைகளும் அவற்றிற்கான எச்சரிக்கைகளும் நாளாந்த பத்திரிகைகளிலும் செய்திகளிலும் காணக்கூடியதாக இருக்கிறது. இருந்தும் கைபேசியும் கையுமாக அலையும் பெண்களின் ஒரு பகுதியினர் மீண்டும் மீண்டும் இவ்வாறான நாசவலைக்குள் அகப்பட்டு விடுகின்றனர்.**





# சிந்திக்க.....

ஒரு அநியாயக்கார அரசன் ஒருவன் ஒரு அப்பாவிக் குடிமகனைக் கைது செய்து மூன்று மீட்டர் மாத்திரமே பரப்பளவான ஒரு தனிச் சிறையில் அடைக்கும்படி கட்டளையிட்டான்.

நிரபராதியான அந்த குடிமகன் ஆர்ப்பாட்டம் செய்ய ஆரம்பித்தான்.

நான் நிரபராதி, ஏன் என்னைக் கைது செய்தீர்கள்? ‘‘ ஏன் என்னைச் சிறையில் அடைத்தீர்கள்?’’

என்று உரக்கக் கதறினான்.

இதனால் அவனை ஒரு மீட்டர் மாத்திரமே விசாலமான ஒரு தனிச் சிறையில் அடைக்கும்படி கட்டளை வந்தது.

மீண்டும் ஆர்ப்பாட்டம் செய்தான் குடிமகன். ஆனால் இம்முறை ‘‘நான் நிரபராதி’’ என்ற வாதத்தை மறந்துவிட்டான்.

‘‘இது என்ன கொடுமை! இந்தச் சிறையில் எப்படி இருப்பது? உறங்குவது? அமர்ந்து கொண்டுதானே உறங்க முடியும்? இது உங்களுக்கே தப்பாகத் தெரியவில்லையா?’’ எனக் கதறினான்.

சினம் கொண்ட காவலன் இன்னும் நான்கு சிறைக் கைதிகளை அவனோடு சேர்த்து அந்தச் சிறிய கூட்டில் அடைத்துவிட்டான்.

இப்போது ஐந்து பேரும் இணைந்து கூக்குரலிட்டனர்.

‘‘எங்களால் முடியாது. நாங்கள் மூச்சுத்திணறி செத்து விடுவோம். உங்களுக்கு ஈவிரக்கம் எதுவும் இல்லையா?’’ எனப் புலம்பினார்கள். மேலும் சினம் கொண்ட காவலன் ஒரு பன்றியை அவர்களோடு சிறையில் அடைத்து விட்டான்.

விரக்தியடைந்த அவர்கள்,

‘‘நாங்கள் இந்த அசிங்கத்தோடு இந்தச் சிறிய கூட்டில் எப்படி இருப்பது? தயவுசெய்து இந்த பன்றியை மாத்திரமாவது வெளியே எடுத்துவிடுங்கள்’’ எனக் கெஞ்சிக்கேட்டனர். தயவு காட்டிய காவலர் ‘‘பன்றியை’’ வெளியே எடுத்தான்.

அடுத்த நாள் அரசன் அந்தப் பக்கமாக வந்து,

‘‘இப்போது உங்கள் நிலை எப்படி?’’ என்று விசாரித்தான்.

‘‘நாங்கள் நல்ல சுகமாக இருக்கிறோம். எங்கள் பெரிய பிரச்சினை தீர்ந்துவிட்டது’’ என்று பதில் கூறினார்கள்.

இப்படித்தான் எமது நாட்டில் ‘‘பன்றிமயக் கோட்பாடு’’ அமுல்படுத்தப் படுகிறது. இறுதியில் பன்றியை மாத்திரம் எடுத்து விட்டால் போதும் என்ற கோரிக்கையோடு ஆர்ப்பாட்டம் முடிந்துவிடுகிறது. அதற்கு முன்னால் இருந்த விவகாரம், அதற்கும் முன்னால் இருந்த மூல விவகாரம் எல்லாம் மறக்கடிக்கப்படுகிறது.

புதுப்புதுப் பிரச்சினைகளைக் கட்டவிழ்த்து விடுவார்கள், முடிவில், ‘‘பன்றிமயக் கோட்பாட்டை’’ நடைமுறையாக்குகின்றனர். அதிலிருந்து விடுபட வேண்டும் என்பதற்காக முதன்மைப் பிரச்சினைகளை நாமே மறந்து விடுகின்றோம்.

மறக்க வைக்கப்படுகிறோம்.



# மாணவர் சக்தி

**கொற்றவை**

மண் மட்டுமே ஒரு நாடாகாது. ஒரு தேசம் என்பது அதன் மக்களால் உருவாக்கப்பட வேண்டும். ஒரு தேசத்தை வலுப்படுத்த அதன் மக்கள் கடுமையாக உழைக்க வேண்டும். மக்களுக்கிடையில் முரண்பாடுகளைத் தோற்றுவித்து, இனவாதத்தை வளர்த்து, ஒரு இனத்தையே வாழ முடியாத நிலைக்குத் தள்ளும்போது அவர்களிடமிருந்து உயிர் வாழ்தலுக்கான எதிர்ப்புக் கிளம்புவது வாழ்க்கையின் நியதி. நாங்கள் ஒரு நல்ல விதையை விதைக்கும் போதுதான் அது ஒரு நல்ல மரமாகி நல்ல பழங்களைக் கொடுக்கிறது. அதே போல, ஒரு நல்ல மாணவனை நாம் உருவாக்கும்போது, அவன் ஒரு நல்ல குடிமகனாகிறான். அவன் பின்னாளில் சிறந்த குடிமக்களை உருவாக்கி வளர்க்கிறான். மாணவர்கள் தான் ஒரு நாட்டின் வருங்கால வாரிசுகள். நாட்டின் முக்கிய உறுப்புகள். மாணவர்களால் ஒரு சிறந்த தேசத்தை உருவாக்க முடியும்.

யப்பான், சீனா போன்ற நாடுகள் தமது மாணவர்களை துறைசார் வல்லுனர்களாக வளர்த்து, தம்மை மனிதவள நாடுகளாக மாற்றியமைத்துக் கொண்டதன் பின்னர்தான் உச்சத்தை அடைந்திருக்கின்றன. மாணவன் என்பவன் தேசத்தின் தூணாக மட்டுமல்லாது தேசத்தைப் பாதுகாக்கும் இளம் வீரனாகவும் இருக்கிறான். தன்னலமற்ற மாணவ சக்தி எத்தனையோ தேசங்களை விடுவித்திருக்கிறது, எத்தனையோ சர்வாதிகார அரசுகளை வீழ்த்தியிருக்கிறது.

இன்று இலங்கை மக்கள் வாழ வழியற்று பட்டினிச் சாவின் விழிம்பில் நிற்கிறார்கள். ஏற்கனவே மரணங்கள் நிகழ ஆரம்பித்து விட்டன. இவை அனைத்திற்கும் காரணமானவர்கள் அரசுக்கட்டில் இருக்கும் சிங்கள அரசியல்வாதிகளே. ஊழலும், லஞ்சமும், பொய்யும் புரட்டும், அதிகார மமதையுமாக அவர்கள் வீங்கிப்போக, நாதியற்ற மக்கள் நடுத்தெருவிற்குத் தள்ளப் பட்டுள்ளனர். அரச எதிர்ப்புப் போராட்டமான ‘கோட்டா கோ கம’மாணவர்களையும் தாங்கி வலுப்பெற்று நிற்கிறது. எந்த எல்லைக்கும் போகத்துணியும் ஒரு சர்வாதிகார அரசு மாணவர்களை மட்டும் விட்டு வைக்குமா என்ன? பல்கலைக் கழகங்களை மூடி, போராட்டத்தையும், மாணவர்கள் ஒன்று திரழ்வதையும் தவிர்க்க, சிங்கள அரசியல்வாதிகள் தமது கூலிப்படை போல் செயற்படும் காவற்துறையையும் இராணுவத்தையும் ஏற்கனவே பயன்படுத்தத் தொடங்கி விட்டனர்.

எவ்வாறு இனி வாழ முடியாது என்ற ஒரு சூழ்நிலை ‘கோட்டா கோ கம’ உருவாக வழிவகுத்ததோ அவ்வாறு சிங்கள அரசால் தமிழ் மாணவர்களின் உயர்கல்விக்கு ஆப்பு வைக்கும் வகையில் கொண்டுவரப்பட்ட ‘தரப்படுத்தல்’ முறை தமிழ் மாணவர்களைக் கிளர்ந்தெள வைத்தது. ஏற்கனவே மொழிப்பறிப்பினால் பாதிக்கப்பட்டிருந்தவர்களை தரப்படுத்தல் முறை போராடத் தூண்டியது. இதன் விளைவாக 1971 சனவரியில் திரு சத்தியசீலன் தலைமையில் ‘தமிழ் மாணவர் பேரவை’ உருவாகியது. தமிழ் மாணவர் பேரவையின் பின்னால் மாணவர்கள் அணிதிரண்டனர். அரசின் அடக்குமுறைகள் அதிகரிக்க அதிகரிக்க, உரிமை கேட்டுப்





போராடிய மாணவ சமூகம் அரசியலினுள் தள்ளப்பட்டது.

அவ்வாறு தமிழ் மாணவர் பேரவையில் தன்னை முழுமையாக இணைத்துப் போராடிய திரு சிவகுமாரன், அவரின் தீவிர செயற்பாடுகளின் காரணமாக சிங்கள அரசினால் தேடப்படும் ஒருவரானார். காவற்துறையிடம் அகப்படக்கூடிய ஒரு சூழ்நிலை வந்தபோது ‘சயனைட்’ எனும் கொடிய விசம் அருந்தி அவர் தன்னை மாய்த்துக் கொண்டதானது, அதன் பின்னதான ஆயுதப் போராட்டத்தில் உயிருடன் பிடிபடாதிருக்க ‘சயனைட்’ அருந்துவதன் முன்னோடியானது. இதில் நாம் ஒன்றை தெளிவாகப் பார்க்க முடிகிறது. தமது உரிமைகளை மீளப்பெற மாணவ வயதில் போராடத் தொடங்கிய ஒரு இளைய தலைமுறை, சயனைட் உட்கொண்டு தம்மை மாய்த்துக் கொள்ளும் அளவிற்குத் தள்ளப் பட்டிருக்கிறது. ஆயின், அவர்கள் மீது கட்டவிழ்த்து விடப்பட்டிருந்த அடக்குமுறையின் அளவு எவ்வளவு மோசமானதாக இருந்திருக்கும்?

1971 இல் இலங்கையின் தெற்குப் பகுதியிலிருந்து ‘ஜனதா விமுக்தி பெரமுன’ ( JVP ) யினால் அப்போதைய சிறிமாவோ அரசுக்கு எதிராக நடத்தப்பட்ட ஒரு ஆயுதப் புரட்சி, இந்திய, சீன அரசுகளின் உதவியுடன் முளையிலேயே கிள்ளி எறியப்பட்டதாக ‘மிலிடறி விக்கி’ ( military wiki ) தெரிவிக்கிறது. இந்தப் போராட்டத்தில் ஆயிரக் கணக்கான பல்கலைக்கழக மாணவர்கள் பங்கு கொண்டிருந்தனர். அவர்கள் மூர்க்கத்தனமாகத் தாக்கப்பட்டும், சுடப்பட்டும் கடும் சித்திரவதைகளுக்கு உள்ளடக்கப் பட்டும் கொல்லப்பட்டனர். இழப்பின் தொகையை அரசு குறைத்துக் காட்டினாலும், பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் கொல்லப்பட்டிருந்தனர் அல்லது காணாமற் போயிருந்தனர்.

வேறு எத்தனையோ நாடுகளில், மாணவர்கள் செயற்பாட்டினால் நிகழ்ந்த மாற்றங்களையும், மாணவ போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியவர்கள் பின்னாளில் நாட்டுக்கே தலைவராகி வழிநடத்தியதையும் வரலாற்றிற் பார்க்கலாம். 1989 ஏப்ரல் 18 அன்று சீன அடக்குமுறைக் கம்யூனிச அரசை எதிர்த்து மாணவ ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. மாணவர்கள் வகுப்புகளைப் புறக்கணித்தனர். அரசின் எச்சரிக்கையையும் மீறி ஆர்ப்பாட்டங்கள் தொடர்ந்தன. இறங்கி வராத அரசுக்கு எதிராக ‘தியனன் மென்’ சதுக்கத்தில் நடைபெற்ற உண்ணாவிரதப் போராட்டம் கண்ணீர்ப் புகைக் குண்டு, தடியடி என்று எதற்கும் கலைந்து போகவில்லை. இறுதியில் மாணவர்கள் மீது டாங்கிகளை ஏற்றி அவர்களை உயிருடன் அரைத்துத் தள்ளியது சீன அரசு. பல்லாயிரக்கணக்கான மாணவர்கள் இதன்போது கொல்லப்பட்டனர். இது சீன அரசியலில் பெரும் பாதிப்பை ஏற்படுத்திய ஒரு போராட்டமாகும்.

“மாணவர்கள் செயற்பாட்டினால் நிகழ்ந்த மாற்றங்களையும், மாணவ போராட்டங்களுக்குத் தலைமை தாங்கியவர்கள் பின்னாளில் நாட்டுக்கே தலைவராகி வழிநடத்தியதையும் வரலாற்றிற் பார்க்கலாம்”

வியட்நாமில் அமெரிக்கா நடத்திக் கொண்டிருந்த போரில் பாரிய அழிவுகளைச் சந்தித்துக் கொண்டிருந்தது. இழப்பின் தீவிரத்தை மக்களிடமிருந்து மறைத்து போர்செய்யும் அமெரிக்க அரசை எதிர்த்து கென்ற் மாநிலத்தில் மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தனர். அவர்கள் மீது கண்ணீர்ப் புகைக்குண்டுத் தாக்குதல், துப்பாக்கிப் பிரயோகம் என்பன நடத்தப்பட்டன. அவசரகால நிலை பிரகடனப் படுத்தப் பட்டது. இந்த மாணவர் போராட்டத்தினால் அமெரிக்காவின் வியட்நாமிய அத்துமீறல் வெளிக்கொணரப் பட்டது.

1942 இல் ஜேர்மனிய நாசி அரசாங்கத்தின் கொடூரங்களை ஜேர்மனியருக்கும் உலகுக்கும் தெரியப்படுத்துவதற்காக ‘வெள்ளை ரோஜா’ இயக்கம் நடத்தப்பட்டது. பல்கலைக்கழகங்கள் இணைந்து துண்டுப் பிரசுரங்கள் மூலம் தகவல்களை மக்களுக்குத் தெரியப் படுத்தினர். இறுதியில் மாணவ தலைவர்கள் நாசி அரசால் தூக்கிலிடப்பட்ட போதும் அவர்களின் முயற்சி வெற்றி பெற்றிருந்தது. இவ்வாறே சோவியத் அரசாங்கம் உடைந்து போனபின்பும், கம்யூனிச செக்கோஸ்லாவாக்கிய அரசு தன்னை எதிர்ப்பவர்களைக் கடுமையாகத் தண்டித்தது. நவம்பர் 17, 1989 அன்று அமைதியான முறையில் நடத்த பேரணியை காவலர்கள் கடுமையாகத் தாக்கியதில் பலநூறு மாணவர்கள் காயமடைந்தனர். பின்னாளில் செக்கோஸ்லாவாக்கியா பிரிந்து போகவும் இந்தச் சம்பவத்தின் தாக்கம் ஒரு காரணமானது. கியூப விடுதலைப் போராளியாகவிருந்து பின்னாளில் அரசமைத்த ஃபிடல் காஸ்ட்ரோவும் ஒரு மாணவப் போராளிதான். மாணவர்கள் திரண்டால் எதனையும் சாதிக்க முடியும் என்பதற்கு உலகில் இன்னும் எத்தனையோ உதாரணங்கள் உள்ளன. அடக்குமுறைதான் தீர்விற்கான வழியையும் தீர்மானிக்கிறது. மீள முடியாத சிக்கலில் வீழ்ந்து கிடக்கும் இலங்கைப் பிரச்சனையின் தீர்வில், மாணவர்களின் பங்கு என்னவாக இருக்கப் போகிறது? பொறுத்திருந்து பார்ப்போம்.



# இளமைக் காலம்

அம்முக்குட்டி

சின்னஞ் சிறு வயதில்
சிரித்து மகிழ்ந்த காலங்கள்
வண்ணப்பூக்கள்
பூப்பதுபோல்
வட்டமிட்டதுபறந்து திரிந்து
கவலை ஏதுமறியாமல்
சுதந்திர வானில்
சிட்டுக்குருவியாய்
சிறகடித்தது. சுற்றித்திரிந்த
காலங்கள்!
பசுமையான
நினைவுகளாய்.

அக்கால வாழ்க்கையிலே
துன்பச் சுவடே அறியாமல்
சுற்றித்திரிந்த
காலத்தில்
பள்ளித் தோழிகள் ஒன்றாகி
பாடித்திரிந்து
பல கதைகள்
தான்பேசி
பட்டாம்பூச்சிகள் போல
பறந்து திரிந்த காலங்கள்.

வயல் வெளி வரப்புகள்
எங்கும் ஓடி
வாய்க்கால் நீரில்
விழுந்து எழும்பி
கலகலவெனவே
சிரித்து விளையாடி
அம்மா கையால்
அடி வாங்கி
அழுது புலம்பி
தானெழுந்து
புன்னகையோடு
அம்மா மடிசாய்ந்து
வாழ்ந்த
சுகமான காலமது
மாலை சூரியன்
மறைகையிலே
அழகிய
இயற்கை காட்சியில்
தோழர் தோழியர்
தமை மறந்து
கூவிடும் புகைவண்டி
ஓசை கேட்டு
புகைவண்டி போல
நாம் மாறி
சுக்கு
புக்குவென
குளத்துக் கட்டில்
குதித்து நடந்த
காலங்கள்
பசுமையான
நினைவாக.!

சொல்ல சொல்ல மாளாது!
சொல்லிட்டு வார்த்தை
தானில்லை!
அத்தனை அழகான
ஊர் விட்டு
அகதியாக
அல்லலுற்று
துன்ப சுமையில்
வாழும் காலமதில்
மலரும் நினைவு
தனை மீட்க
மலர்தோட்டம்
உதவியது
வாழ்க வாழ்க
மலர்தோட்டம்..
மனம் நிறைந்த
வாழ்த்துக்கள்!!



கார்த்திகை

# ஊர் உலா!!

இரவிரவாகச் சிணுங்கிக் கொண்டிருந்த மழை அதிகாலையிற்தான் சற்று ஓய்ந்திருந்தது. ஊருக்கு வந்திருந்த சுப்பையர் வெள்ளையும் சள்ளையுமாக ‘‘வாக்கிங்’’ புறப்பட்டார். ஊர் முற்றிலுமாக மாறியிருந்தது. வழியில் கண்டவர்கள் எல்லாம் தலையசைத்தும், ‘‘எப்ப வந்தனீங்கள்?’’ என்று சுகம் விசாரித்தும் கடந்து போனார்கள். அவர்களில் பாதிப்பேரை அடையாளமே தெரியவில்லை சுப்பையருக்கு.

சுப்பையர் ‘‘லண்டன் றிற்றேண்’’. சுமார் பதினாறு வருடங்களுக்கு முன்னர், குண்டு வீச்சும் ஷெல்லடியுமாக நாடு அவதிப் பட்டுக் கொண்டிருந்த காலத்தில், சிறுவயதிலேயே நாட்டை விட்டுப் போன மகனுடன் போய் ஐக்கியமாகி விட்டார். சிறு வயதிலேயே மகனை ‘‘ஹொஸ்டல்’’ இல் தங்கவைத்து யாழ் பிரபல கல்லூரியொன்றில் படிப்பித்தவர் சுப்பையர். ஊருக்குள் இருந்தால் குறுகிய வட்டத்துக்குள் இருக்கும் கிராமத்து சிந்தனைதான் அவனுக்கும் வந்துவிடும் என்ற கணிப்பு அவருக்கு. யாழ் பிரபல கல்லூரியொன்றில் மகன் படித்ததில் தனது அந்தஸ்து கூடிவிட்டதான ஒரு எண்ணம் சுப்பையருக்கு.

நாட்டில் பிரச்சனைகள் தீவிரமானதும், தாயில்லாமல் தனியனாக நின்று தன்னை வளர்த்து ஆளாக்கிய தகப்பனையும் சேர்த்துத் துடைத்தெறிந்து விட்டு வெளிநாட்டுக்கு ஓடிவிட்டான் மகன். இருக்கும் காணிகளை எல்லாம் வித்துச் சுட்டு, இங்கேயிருந்து சுப்பையர் அனுப்பினவனுக்குக் காசு கட்டிக் கொண்டிருந்தது அது தனிக்கதை. ஒருவழியாக, தனக்குப் பிடிச்ச ஒருத்தியுடன் மகன் லண்டனில் ‘‘செற்றில்’’ ஆகிவிட்டான் என்று அறிந்து நிம்மதிப் பெருமூச்சு விட்டார் சுப்பையர். அவன் என்ன நினைத்தானோ. திடீரென்று சுப்பையருக்கும் ‘‘லண்டன் ஃபிளைற்’’ எடுக்க யோகம் அடித்தது. பல வருடப் பிரிவு. மகனும் தனது தேவை வந்தாலன்றி அள்ளளவாகப் பழகுகிறவன் இல்லை. தகப்பனுக்கும் மகனுக்கும் பெரிதாக ஒட்டவில்லை. உதட்டளவில் பேசிக் கொண்டார்கள். மருமகள் அதற்கும் மேல். மரியாதை தவறுவதில்லை. ஆனால், ‘‘இது என்னுடைய குடும்பம், நீங்கள் என்ன இருந்தாலும் வெளியில் ஆள்’’ என்பதில் தெளிவாக இருந்தாள். வயது போன காலத்தில் தனியாக மாண்டு போகாமல் மகன் குடும்பத்துடன் இருக்கவாவது கிடைத்ததே என்ற சந்தோசம் சுப்பையருக்கு.

கடைகண்ணிக்குப் போவது, பேரப்பிள்ளைகளைப் பார்ப்பது, பள்ளிக்கு விட்டு எடுப்பது, வீட்டைத் துப்பரவாக வைத்திருப்பது, சமையல் சாப்பாடு என்று எல்லாவற்றிலும் தானும் பங்கெடுத்து வாழ்க்கையை மும்முரமாக்கிக் கொண்டார் அவர். மகனும் மருமகளும் பாவம் நாள் முழுக்க வேலை. இருக்கும் நேரத்தில் ரிவி, ஓய்வு, பார்ட்டிகள் என்று அவர்கள் பொழுது போய்விடும். தனக்கென்று தனியாக அரசாங்க உதவித் தொகையும் அரச வீட்டு வாடகைக் கொடுப்பனவும் வந்துவிடுவதால், சுப்பையருக்குப் பணப் பிரச்சனை இல்லை. என்ன செலவு வந்துவிடப் போகிறது அவருக்கு? தனக்கென்று கொஞ்சப் பணத்தை எடுத்து வைத்துக் கொண்டு மிகுதியை அப்படியே மருமகளிடம் கொடுத்து விடுவார் அவர்.

மிக நீண்ட பதினாறு வருடங்களின் பின் இப்போதுதான் மறுபடி ஊருக்கு வந்திருக்கிறார். அதுவும் பேரனுக்கு கொழும்பில் ஒரு குறுகிய காலப் பயிற்சி. அவனைத் தனியாக எப்படி அனுப்புவது என்று பாட்டனையும் உதவிக்கு அனுப்பியிருக்கிறார்கள். கொழும்பு வந்த சில நாட்களிலேயே பிரச்சனை இறுகிவிட்டது. பயிற்சிகள் இடைநிறுத்தப் பட்டு விட்டன. சாமான்களுக்கு பெருத்த தட்டுப்பாடு வந்துவிட்டது. ஊருக்குப் போய் கொஞ்சநாள் இருக்கலாம் என்றால் பேரனுக்கு துளியும் விருப்பமில்லை. சுப்பையரின் பிடிவாதம்தான் இரண்டுபேரையும் இப்போது ஊருக்குக் கொண்டு வந்திருக்கிறது.

ஊரில் ஒன்றுவிட்ட தங்கை மகள் சரசு இருக்கிறாள். பிள்ளைகள் இல்லை. அவளின் சகோதரங்கள் அவளைத் தாங்கு தாங்கென்று தாங்குகிறார்கள். பெரிய மாளிகை மாதிரி வீடு, சுற்று மதில், வளவு



நிறைய வண்ண வண்ணப் பூக்களுடன் பூந்தோட்டம் என்று நன்றாக இருக்கிறாள். புருசனுக்கும் வேலை வெட்டி இல்லை. அவர்க ளுடன்தான் சுப்பையரும் பேரனும் தங்கல்.

பசுமையை ரசித்தவாறே கொஞ்சத் தூரம் நடந்து வந்துவிட்டார் சுப்பையர். லண்டனில் இருந்தபோது விடாமற் துரத்திய முட்டு வலி எங்கே போனது என்றே தெரியவில்லை. ஊர்வாசத்திற்கு அவ்வளவு சக்தி. திடீரென்று இருண்டு கொண்டு வந்தது. கருமேகம் ஒன்று கூடி ‘‘பொட்! பொட்!’’ என்று சில மழைத்துளிகள் தலையில் விழுந் ததும் தான் எங்கே நிற்கிறோம் என்ற உணர்வே வந்தது அவருக்கு. சுற்றுமுற்றும் பார்த்து மழைக்கு ஒண்டிக்கொள்ள இடம் தேடினார். அருகிலிருந்த தேநீர்க் கடையில் இறக்கியிருந்த சாய்ப்பில் சிலர் ஓடி வந்து ஒதுங்கினர்கள். சுப்பையரும் விரைந்து போய் ஒண்டிக் கொண்டார். ஒரு பாட்டம் ‘‘சோ’’வென்று அடித்து ஓய்ந்தது மழை. காற்றில் ஆடிய மரக்கிளைகளிலிருந்து அபிஷேகம் செய்த மழைத் தண்ணீரைப் பொருட்படுத்தாமல் சாய்ப்பிற்குள் நின்றவர்கள் வீதியில் இறங்கி நடக்கத் தொடங்கினர்.

‘‘சாய்.!! என்ன அருமையாக் கிடக்கு. குளிருக்கை, உடுப்பைச் சுமையாப் போர்த்தி மூடிக் கட்டிக்கொண்டு திரியுறதும் ஒரு பிழைப் பே..!!’’

மழை விட்ட பிறகும் சார்மானத்தின் கீழேயே நின்று கொண்டி ருந்தார் சுப்பையர்.

‘‘என்னவும் ஓய்..!! எப்ப வந்தனீர்..?’’

பழக்கப்பட்ட ஒரு குரல் அன்புடன் விழித்தது. இந்த ‘‘ஓய்’’ அவரின் வயதிற்குரியவரின் காலத்தில், நண்பர்களை விழிக்கும் யாழ் மேல்மட்டப் பேச்சு வழக்கு.

அவரின் பால்ய நண்பன் சின்னத்தம்பி இரண்டு காளை மாடுகளு டன் வந்து கொண்டிருந்தான். மாடுகள், கழுத்திலிருந்த மணிகள் சிணுங்க கம்பீரமாக நடந்தன.

‘‘என்னடாப்பா.!’ இங்கயே நின்றிட்டாய்? வீட்டை வா! ‘மனுசியும் பார்த்தா சந்தோசப்படுவா.’’

இருவருமாக அளவளாவிக்கொண்டே வீடுவரைக்கும் வந்துவிட் டார்கள். கேற்றடிக்குப் பக்கத்திலிருந்த செவ்விளனி மரத்தடியில் ஏதோ செய்துகொண்டிருந்த பார்வதிக்கு இவர்களைக் கண்டதும் சந்தோசம் தாங்கவில்லை.

‘‘வாருங்கோ அண்ணை! எப்ப வந்தனீங்கள்? பயணம் சுகமோ? ஊரைத்தான் மறந்திட்டியள்.. பேரன் எங்கை?’’ மூச்சுவிடாமல் ஆயிரம் கேள்விகள்.

‘‘கரண்ட் இல்லாமல் ரா முழுக்க உழண்டு கொண்டு கிடந்தவன், இப்பான் இழுத்துப் போத்திக்கொண்டு படுக்கிறான் எக்கணம் எழும்ப மத்தியானம் ஆகும்...’’ இத்தனை வருட ஊர்ப்புதினங்களையும் அறிந்துகொள்ளும் அவாவுடன் சின்னத்தம்பியருடன் பேச்சைத் தொடர்ந்தார் அவர்.

கதையின் இடைநடுவில் குரக்கன் ரொட்டி சம்பலுடன் நல்ல தடிப்பான ஆட்டுப்பால் தேத்தண்ணியும் கொண்டு வந்தா பார்வதி.

‘‘காசைக் கொட்டிக் குடுத்தாலும் சாமானுகள் கிடைக்குதில்லை. சரியான தட்டுப்பாடு. பால்மா இல்லாமல் சனம் தவிக்குது. நீங்கள் என்னெண்டு சமாளிக்கிறியள்?’’ வினாவினார் சுப்பையர்.

‘‘என்னண்ணை பேய்க்கதை... நாங்கள் எப்ப உந்தப் பால்மாவை வாங்கின்னாங்கள்...? ‘‘கொட்டடியில ரெண்டு நல்ல திறம் பாலாடு நிக்குது. பால் தாராளமாக் காணும்....’’

‘‘அப்ப சாப்பாட்டுக்கு...?’’

‘‘வளவைப் பாரடாப்பா...’’ சின்னத்தம்பியர் பெருமிதமாகச் சொன்னார்.

‘‘வளவுக்கை என்னதான் இல்லை? தென்னை, மா, பலா, மாது ளை, எலுமிச்சை, வாழை எண்டு எல்லாம் இந்தப்பக்கம் கிடக்கு. அந்தப் பக்கத்தில பப்பாசி, கமுகு, வெத்திலைக் கொடிக்காலுகள், கறிவேப்பிலை, அகத்தி எண்டு எல்லாம் இருக்கு. இடையிடை ஊடுபயிர் வைக்கிறம். ஒரு சின்ன இடத்தையும் வீண்டிக்கிறதில் லை.... தோட்டத்தில எல்லா மரக்கறியும் இருக்கு. குரக்கன், உழுந்து எல்லாம் விதைக்கிறம்..... அத்தினை சாப்பாட்டுப் பயிரும் விளை யுது. வெங்காயம், மிளகாய் எண்டு அதுகளுக்கும் பஞ்சமில்லை... வயல்லை நெல்லு. என்னத்துக்கு கவலைப்படுவான்...?’’

கதையின் இடையில் காணாமல் போயிருந்த பார்வதி ஒரு சிறு கடகமும் கையுமாக வந்தார்.

‘‘கோழியளைத் திறந்துவிட அயத்துப் போனன். கையோட முட்டையளையும் பொறுக்கிக்கொண்டு வந்திட்டன்..’’

நல்ல ஊர்க்கோழி முட்டைகள். 10 ரூபா வித்த சாதாரண முட்டை ஒண்டு இப்ப 60 ரூபா விக்குது.

‘‘எடப்பா....! உரம் இப்ப குதிரைக் கொம்பல்லோ....? நீ உரத்துக்கு என்ன செய்யிறனீ..?’’

ஆடு, மாட்டு எரு, குப்பை கூளம் எல்லாம் திறமான பசளை இல் லையோ...? உரம் இல்லாட்டா என்ன? எங்கடை சேதனப் பசளைக்கு இதெல்லாம் இணையாகுமோ...? இண்டைக்குப் பார்.. விளைச்ச லைக் கூட்டி உடனடிப் பணக்காரராக வேணுமெண்டு கெமிக்கல் உரத்தை அள்ளிக் கொட்டிச்சுது சனம். அரசாங்கத்துக்கு இதுகளிலை



உழைக்க வேணும்.. இப்ப பார். ஆர் தெருவில நிக்கிறதெண்டு? சனந்தான் மாயுது. எந்த அரசியல்வாதியாவது பட்டினி கிடந்து செத்தான் எண்டு வரலாறு இருக்கோ...?

‘‘சிறுபிள்ளை வேளாண்மை வீடுவந்து சேராது எண்டதே எங்கடை பிள்ளையளட்டை பொய்த்துப் போகேல்லையோ.? என்ன அழகா சுயமா எங்கடை பொருளாதாரத்திலை வாழ வழிகாட்டினாங்கள். பிரச்சனை காலத்தில எங்களுக்குப் போடாத பொருளாதாரத் தடை யே? நீங்கள் இங்கை இல்லை அண்ணை நாங்கள் என்ன பட்டினியே கிடந்தனாங்கள்? இல்லை ஆரும் வெளிநாட்டுக் காசு அனுப்பின வையோ..?’’ இடைமறித்த பார்வதி ஒரு பேருண்மையை அழகாகச் சொன்னா.



''அப்ப எரிபொருள்...? மணித்தியாலக்கணக்கா பவர் கட் வருதே....?'' சுப்பையர் மனதில் இன்னும் ஆயிரமாயிரம் கேள்விகள். அவர் ஊரைவிட்டுப் போக முன்னர் இவ்வளவு மோசமாக பிரச்சனை வந்ததில்லை. இத்தனை வருட வெளிநாட்டு வாழ்க்கை, இலகுவாக – உடலை வருத்தாமல் வாழக்கூடியதாக இருப்பது எல்லாம் உடலுக்குப் பழக்கப்பட்டு விட்டதன் பின், பிரச்சனைகளுக்கிடையில் வாழ்க்கையை ஓட்டுவது என்பதே மலைப்பாக இருந்தது சுப்பையருக்கு.

''இப்ப பாக்கிறாய்தானே சனம் பக்கத்தில எங்கயாவது போறது எண்டாக்கூட உடனை மோட்டார் சைக்கிளோ இல்லாட்டா ஓட்டோ பிடித்தோ வெளிக்கிட்டு நல்லாப் பழகீற்றினம் முந்தி. நினைச்சுப் பார். பாதிக்கு மேல பஸ் பிடிச்சுத்தான் பிரயாணம் மிச்ச ஆக்கள் சைக்கிள் இருந்தால் சைக்கிள்ள கிட்டத்தில எண்டால் ரெண்டு எட்டு வைச்சு நடக்க ஆரும் பஞ்சிப் பட்டவையே..?''

''ஓமண்ணை...! தோட்டங்களிலயும் இறைப்புக்கு, உழுகிறதுக்கு எண்டு மோட்டரும் போட்டு ட்ரைக்டரும் பிடிச்சு பழகீட்டுது.... இப்ப இந்த மனுசன் திரும்பவும் துலா மிதிக்க ஒழுங்கு செய்திருக்கிறார்.... இவர் எப்பவும் உழவுக்கு காளையளை வைச்சிருக்கிறபடியால் அந்தப் பிரச்சனை இல்லை...'' இடையிடை பார்வதியும் குறுக்கிட்டார்.

''ஏன்? 'காஸ்' இல சமைச்சுப்பழகி இப்ப திருப்பியும் விறகடுப்போ எண்டு நீ புலம்புறதையும் சொல்லன்....'' ஒரு முதிர்ந்த நக்கல் விட்டார் சின்னத்தம்பியர்.''

''பவர் கட், சாமானுகளுக்குத் தட்டுப்பாடு எண்டு.. எல்லாம் பிரச்சனைதான். இல்லையெண்டு சொல்லேல்லை... ஆனாப் பார்,... துளி மண்ணெண்ணெய் விட்ட ஜாம் போத்தல் விளக்கில நாங்கள் எத்தினை வருசம் வாழ்ந்தனாங்கள்...? அப்பிடிப் படிச்சவைதான் இப்ப பெரிய பெரிய உத்தியோகத்தில இருக்கிறவை எல்லாம்... ஏன் வெளிநாட்டில இருந்தாலும் அந்தத் தலைமுறைக்கு இது மறக்குமோ...? எல்லாம் வெல்லலாம்....!!''

''தெற்கில இருக்கிறவை மாதிரி அரசாங்கத்தை மட்டுமே நம்பிக்கொண்டு இருக்கிற சனமில்லை எங்கடை இனம்... தேவை ஏற்படேக்க புதுப்புதுக் கண்டுபிடிப்புகளோடை சீவிச்ச இனமல்லோ நாங்கள். இப்ப தெற்கில இருக்கிறவையே எங்கட புண்ணியவானட்டை நாட்டை விட்டிருந்தால் இந்தப் பிரச்சனையே வந்திராது எண்டு சொல்லேல்லையோ...?'' சின்னத்தம்பியரின் குரலில் பெருமிதமும், அதேசமயம் எவற்றையெல்லாம் தொலைத்து விட்டோம் என்ற ஏக்கமும் தொனித்தது.

பேரனையும் கூட்டிக்கொண்டு மீண்டும் வருவதான உறுதிமொழியுடன், நீண்ட நாள் நண்பன் குடும்பத்திடமிருந்து விடைபெற்றார் சுப்பையர். மனது இலகுவாகியிருந்தது. சரசு வீட்டில் முற்றிலும் எதிர்மறையாக இருந்தது.

''வாங்கோ மாமா..!! கன தூரம் நடந்திட்டியள் போல'' இடையிடை 'உஸ்... உஸ்...' என்று பெருமூச்சு விட்டாள் சரசு.

''இந்த கண்டறியாத 'கரண்ட் கட்' டாலை ஒரு ஃபான் கூடப் போடேலாது. தேத்தண்ணி போடுவம் எண்டால்.... கேத்திலும் போடேலாது...'

'நான் குடிச்சிட்டன்.... ஏன் பிள்ளை....!! விறகுகிறகு ஒண்டும் இல்லையே...?''

''உந்தப் புகையுக்க நிண்டால் எனக்கு ஒத்துவராது மாமா..! காசைக் குடுத்தால் இங்க கஸ்டப்பட்டு எண்டாலும் சாமானுகள் வாங்கலாம் நானெல்லாம் இப்ப ஏலாதெண்டால் உடனை சாப்பாடு ஓடர் பண்ணிப் போடுவன்.'' சொல்லியபடி சோபாவில் சரிந்தாள் சரசு.

''சை...!! ஒரு ரிவி கூடப் பாக்கேலாமக் கிடக்கு...''

அப்போதுதான், உடலுழைப்பு எதுவுமே போடாமல், காசை விட்டெறிந்து சோம்பேறியாக ஒரு மேல்மட்ட வாழ்க்கை வாழும் ஒரு வர்க்கமும் இங்கு இருப்பது சுரீரென்று உறைத்தது சுப்பையருக்கு. வெளிநாட்டில் இருப்பவர்கள் காசுக்காக இரவுபகலாக, குளிர் மழை என்று பாராமல் என்னென்ன வேலையெல்லாம் செய்ய வேண்டியிருக்கிறது என்றதைக் கண்கூடாகப் பார்த்தவர் அவர். வீட்டைச் சுற்றியுள்ள நிலம் முழுவதிலும் பூங்கன்றுகளும் பதிக்கப்பட்ட புற்தரையுமாக எந்தப் பிரயோசனமும் இல்லாத அழகு மட்டுமே இருப்பது இப்போதுதான் கண்ணை உறுத்த, மனதுக்குக் கஷ்டமாக இருந்தது.

நாட்டில் எங்கள் மக்கள் கஷ்டப்படுகினம் என்று பார்த்தும் பாராமல் காசை அனுப்பி அனுப்பி இப்படி ஒரு சமூகம் உருவாக நாங்கள்தான் வழிசெய்து விட்டோமோ என்று பட்டது. 'பலர் நாளாந்த வாழ்க்கை நடத்தவும் கரைச்சல் படுகின்றனர். சிலருக்கு மட்டுமே தொடர்ந்த பண உதவி கிடைக்குது.... அவர்களும் அதை வைத்து வாழ்வை மேம்படுத்தாமல் உட்கார்ந்து சாப்பிட்டு பழக்கப்பட்டு விட்டார்களோ...? அப்படியென்றால் பணம் அனுப்புபவர்கள்தான் இந்தச் சிக்கலைத் தீர்க்கவும் வேண்டும்....'

என்ன பிரச்சனை இருந்தாலும், கடைசி காலத்தை நாட்டில் கழிக்க வேண்டும் என்று அடிமனதில் இருந்த நினைப்பு ஒரு தீர்மானமாக மாறுவது சுப்பையருக்கு சந்தோசத்தையே கொடுத்தது.



சு.ஜனா



# விமர்சனத்தால் வீழ்வாயா? பெண்ணே..!!

இந்தக் கவிதை
இந்த சமுதாயத்தைத்
தட்டியெழுப்புமா?
இந்தக் கவிதை - பல
இதயங்களைத் திறக்குமா?
இந்தக் கவிதை
இனிவரும் காலங்களை
இனிதாக்குமா?
இத்தனை பல கேள்விகளுடன்..
இந்தக் கவிதை இறங்கி
முன்னோக்கி வருகிறது!!

ஆண் பெண் என்கின்ற
அநியாயப் பாகுபாடு
அடிமைத்தனம். சிறுமைத்தனம்..
அடியோடு ஒழியுமா..?
அழு!!
பரவாயில்லை..!! - ஆனால்
அதிலே கரையாதே.
அழும் கண்ணீரைத் தண்ணீரால்
கரைத்துவிடு..
எழு.!! எழு!! - ஏனென்றால்
அடுத்த சந்ததி மாந்தர்க்கும்
நீதானே வழிகாட்டி..!!

உனக்கு மேல் வீசப்படும்
தடைக் கற்களால்
காயப்பட்டு. உன்னை நீயே
கட்டிவைக்கப் போகிறாயா? - இல்லை
காற்றாய் இந்தக் காலத்துடன் கலந்து
வீசப் போகிறாயா.??
ஒரு பெண் தனித்து நின்றால்
ஓரங்கட்டும் மனிதர்களால்
ஒடுங்கிப் போவாயா? - இல்லை
ஓங்கித் தளைப்பாயா??
குற்றம். குற்றம்.
குறை சொல்லும் கூட்டம்
அறைவிடும் பல சட்டம் - இதில்
அகப்பட்டு. உனக்கு நீயே
வரையப் போகிறாயா
வட்டம்..??

கொடுமை என்னவென்றால்
பெண்ணைப் பெண்ணே நசுக்கும்
வஞ்சம்தான்..
பொறாமைத் தீயில் வேகிவிடாதே.
சாட்டுக்குச் சகோதரத்துவம்
பேசும் வாய்கள்
சந்தர்ப்பம் பார்த்திருந்து
உன்னை வீழ்த்த நினைக்கும்.
சாயாதே.. பெண்ணே..!! ஓயாதே.!!

முகமூடி மனிதர்களின்
முகத்திரை விலகுமா? - அவர்களின்
அகக்கண்கள் திறக்குமா?
சகமனுஷியாய் மாந்தரையும்
மதிக்குமா? - இல்லை
மட்டமாய் நினைக்குமா?
இந்த நிலை
இனிவரும் பெண்ணினத்தையும்
தொடருமா..??

பாரதி சொன்னான் வேதம்!!
வீழ்வேனென்று
நினைத்தாயோ? - நான்
வீழ்வேனென்று நினைத்தாயோ??
வீரத்துடன் காரத்துடன்
உரத்துச் சொல்..!!
உலகுக்கே எதிரொலிக்க
உரத்துச் சொல்!!
உனக்கு உரிமையிருக்கு..!
உனக்குள் உண்மையிருக்கு..!
உன் ஒவ்வொரு அணுவிலும்
சக்தியிருக்கு.. புத்தியிருக்கு.
வெளிப்படு எழுச்சியுடன்!!
பெண்ணே..!! பெண்ணே..!!
நீ நினைத்தால்
மாறும் இச் சமுதாயம்
கண் முன்னே!!



# வங்கம் தந்த பாடம்

அங்கம்: 02

**26 ம்** திகதி பங்குனி மாதம், நாம் ஜெனரல் யகியா கான் வானொலியில் பேசுவதைக் கேட்டோம். அக்கட்டம் மிகவும் பயங்கரமான கட்டமாகும். ஒரு நாட்டின் பிறப்பு வேதனைகளை என்னால் உணரக்கூடியதாக இருந்தது. பாக்கிஸ்தான் இராணுவத்தின் நடவடிக்கைகளுக்கு எதிரான வெறுப்புணர்வுகளை நான் நேரடியாகக் காட்டியதால், எனது மேலதிகாரிகளின் சந்தேகங்களுக்கு நான் உள்ளானேன். குயாட்டாவில் நடந்த பயிற்சி வகுப்பு நிற்பாட்டப்பட்டு நாம் எமது இராணுவப் பிரிவுகளுக்குச் செல்லுமாறு பணிக்கப்பட்டோம்.

இக்கட்டத்தில், பல கீழ்மட்ட அதிகாரிகள், லெப்டினன்டுகள், உபலெப்டினன்டுகள் ஆகியோர் என்னை அணுகி, எனது ஆலோசனைகளைக் கேட்டார்கள். நான் அவர்களுக்கு அவர்களின் கடமையைத் தெளிவாக விளக்கி, தாய்நாட்டின் விடுதலைப் போராட்டத்தில் அவர்களும் சேரவேண்டும் எனக் கூறினேன். அக்கட்டத்தில், குயாட்டாவில் உள்ள சில வங்காளி உயர் அதிகாரிகள் தம்முடன் பேசப் பயப்படுவதாக அவர்கள் என்னிடம் கூறினார்கள். எனது கருத்துக்களை உணர்ந்த இந்த உயரதிகாரிகள் என்னுடனும் பேசப் பயப்பட்டார்கள்.

இதே உயர்திகாரிகள்தான் இன்று இராணுவத்தில் உயர் பதவிகளில் உள்ளனர். என்னை இங்கு விசாரிக்க முயற்சி செய்யும் குழுவில் உள்ளவர்களும் இவர்களே. பங்குனி மாதம் 25ம் திகதிக்கு முன்னர் இவர்கள் ஷேக் முஜிபுர் உடன் தங்களுக்குள்ள தொடர்புகளை வெளிப்படையாகப் பெருமையாகக் காட்டினார்கள். 25ம் திகதிக்குப் பின்னர் அவர்கள் அவரைத் தேசத்துரோகி எனக் கூறினார்கள்.

பின்னர், ஆலோசனை கூறிய உபலெப்டினன்ட் நூரும், உப லெப்டினன்ட் இனாமும் வெற்றிகரமாகத் தப்பியோடி, விடுதலைப் போராட்டத்தில் சேர்ந்ததாகக் கேள்விப்பட்டு நான் மகிழ்ச்சியடைந்தேன். சில நாட்களுக்குப் பின்னர் குயாட்டாவில் வைத்துக் கைது செய்யப்பட்ட நான், அப்போதைய கிழக்குப் பாக்கிஸ்தானில் இழைக்கப்பட்ட அநீதிகளை ஆட்சேபித்ததாகக் குற்றம் சாட்டப்பட்டேன்.

ஆனால், என்னுடைய நண்பரும் காலாட்படை பாடசாலையின் தளபதியுமான மேஜர் ஜெனரல் பி எம் முஸ்தபாவின் தலையீட்டினால் எனக்கெதிரான குற்றச்சாட்டுகள் விலக்கப்பட்டன.









# வங்கம் தந்த பாடம்

நான் காரியர் இராணுவப் பிரிவிற்கு அனுப்பப் பட்டேன். இங்கு நான் சாதாரண படைப்பிரிவில் சேர்க்கப்பட்டேன். கிழக்குப் பாக்கிஸ்தானில், எனது சொந்த மக்களைக் கொல்ல அனுப்பப்பட்ட எனது சொந்த இராணுவப் பிரிவில் சேர, நான் அனுமதிக்கப் படவில்லை. இந்த இராணுவப் பிரிவுதான் ஷேக் முஜிபுர் ரகுமானைக் கைதுசெய்தது.

காரியரில் என்னுடன் கப்டன்கள் டெல்வரும், பட்லாரியும் தப்பியோடி விடுதலைப் போராட்டத்தில் சேர இணைங்கினார்கள். பாக்கிஸ்தான் ஆட்சியிலிருந்த காஷ்மீரிலிருந்து மீர்பூரிலிருந்த ஒரு வங்காளிப் பொறியியலாளருடன் நாம் தொடர்பு கொண்டபோது, அவர் எமக்கு இடவசதி செய்து தருவதுடன், எல்லை வரை போவதற்கு வாகனமும் ஒழுங்குசெய்து தருவதாகக் கூறினார். ஒரு குறிப்பிட்ட நாளில், குறிப்பிட்ட நேரத்தில் நாம் மீர்பூரை அடைந்த போது, அப் பொறியியலாளர் வீட்டைப் பூட்டிவிட்டுத் தனது குடும்பத்துடன் எங்கோ சென்றிருப்பதைக் கண்டு மிகவும் ஆச்சரியமும் ஏமாற்றமும் அடைந்தோம். வங்காள மேற்தட்டு வர்க்கத்தின் தேசப்பற்றற்ற தன்மையை முதற்தடவையாக உணர்ந்தபோது, அதை அனுபவித்தபோது வலித்தது.

அந்த மத்தியானம் நாங்கள் அந்த வீட்டு முற்றத்தில் தங்கியிருந்தோம். இரவானதும் மலைகளில் ஏறத் தொடங்கினோம். எனது சகாக்களான காப்டன்கள் டெல்வரும், பட்லாரியும் கரடுமுரடான மலைகளுக்குப் பயிற்றப்படாதபடியால், சில மணித்தியாலங்களின் பின்னர் பயணத்தைத் தொடர மறுத்தனர். எனவே, வேறு வழியில்லாமல் நாங்கள் மீண்டும் காரியர் இராணுவப் பிரிவிற்கு வரவேண்டிய நிலை ஏற்பட்டது.

அப்போது மேற்கு பாக்கிஸ்தானில் ஏறக்குறைய 1000 வங்காளி அதிகாரிகள் இருந்தார்கள். அவர்களில் பலரை நான் சந்தித்து, தப்பி வந்து விடுதலைப் போராட்டத்தில் சேருமாறு தூண்டினேன். எனினும், வங்காளி மேல் வர்க்கத்தின் தேசப்பற்றானது வெறுமனே இராணுவ அறையில் விவாதத்திற்கு மட்டுமே என்பதைப் பார்த்து மனம் வருந்தினேன். பின்னர் நான் அபோடாபாத்திலுள்ள பலூச்சி இராணுவ முகாமிக்கு அனுப்பப்பட்ட பொழுது அங்குள்ள வங்காளி அதிகாரிகளை விடுதலைப் போராட்டத்தில் சேருமாறு கூறினேன்.

இக்கட்டத்தில், ராவல்பிண்டி பிரதான இராணுவ முகாமிலிருந்து மேஜர் சியாவுடின் என்னுடன் தப்பியோட இணைங்கியது மிகவும் நன்மையாகவிருந்தது. எல்லை மட்டும் செல்வதற்காக, என்னிடமிருந்த எல்லாப் பணத்தையும் கொண்டு ஒரு பயன்படுத்திய காரை வாங்கினேன். நானும் சியாவுடினும் பிண்டியிலிருந்து புறப்பட்டோம். வழியில் ஜேலத்திலிருந்து வந்த காப்டன் பட்வாரியையும் சேர்த்துக்கொண்டோம். பகல் நேரத்தைப் போக்க வேண்டியிருந்தமையினால், சியால்கோட் இராணுவப் பிரிவிலிருந்த மன்சூரின் வீட்டிற்குச் சென்றிருந்தோம். மன்சூருக்கு எமது திட்டங்கள் தெரிந்திருந்தன.

**போர்வீரர்களுக்கும் இக்கருத்துப் பொருந்தும். அவர்கள் ஒருபோதும் ஒரு தேசிய விடுதலைப் போரை எதிர்பார்க்கவில்லை. இதன் விளைவு, உலகில் ஒரு நவீன இராணுவத்திற்கு எதிரான, தொடர்ச்சியான, ஒரு வித்தியாசமான போருக்கான எந்த ஆயத்தமும் இருக்கவில்லை. எமது மக்களுக்கும், குழந்தைகளுக்கும், ஏன் எமது போர்வீரர்களுக்குமான உணவையும் இருப்பிடத்தையும் இந்தியா மிக மகிழ்ச்சியுடன் வழங்கியது. இதனால் உலக அரசியலிலும், சர்வதேச நாடுகளிலும் இந்தியாவின் செல்வாக்கும் நன்மதிப்பும் அதிகரித்திருக்கும். உபகண்டத்தில் மேலாதிக்கம் எனும் இந்தியக் கொள்கை பலப்படுத்தப்பட்டிருக்கும். பங்களாதேஷின் நிலைமைகளினால் புவியியல், அரசியல் ரீதியாகவும், பொருளாதார, மூலப்பொருள் ரீதியாகவும் இந்தியாவே கூடுதல் பயனடைந்திருக்கும். இவ்வளவு மட்டுமே நான் போரைப்பற்றிக் கூற முடியும். எமது அதிகாரிகளும், போர் வீரர்களும் இந்தியர்களின் விருப்பங்களையும், போர்த்திட்டங்களையுமே கூடுதலாக நடைமுறைப் படுத்தினார்கள். இதுவே இந்த இழிநிலைக்கு எம்மை ஆளாக்கியது.**



# வங்கம் தந்த பாடம்

ஆனாலும் அவர் அமைதியாக இருந்தாரே ஒழிய எங்களுக்கு உற்சாகத்தைத் தரவில்லை. ஆனால், அவரது மனைவியின் முயற்சியால் அவரும் எம்முடன் சேர்ந்து தப்பியோடிவர இணங்கினார். இப்படியாக, மேஜர் மன்சூரும், அவரது குடும்பமும், அவரது சேவையாளரும் எம்முடன் சேர்ந்து கொண்டனர். இரவானதும் நாங்கள் எல்லோரும் எல்லைக்குச் சென்றோம். அங்கு காரை விட்டுவிட்டு, எல்லையைக் கடந்து இந்தியாவை அடைந்தோம்.

எல்லாவிதமான சுரண்டல்களிலிருந்தும், மேலாதிக்கத்திலிருந்தும் எம்மை விடுதலைப்படுத்தும் என்ற நம்பிக்கையுடன்தான் நாங்கள் விடுதலைப் போராட்டத்தில் இணைந்தோம். ஒரு நீதியான சமுதாயத்தை உருவாக்க எண்ணியிருந்தோம். சுதந்திரப் போராட்டத்திற்குப் பிறகு என்ன நடந்தது? உண்மையாகப் பார்க்கும் பொழுது, போரின் பெரும்பகுதி எமது நிலத்தில் நடைபெறவுமில்லை. இந்தப் போர் எமது மக்களுக்கு மிகச் சொற்பளவு நன்மைகளையே தந்தது. ஆயுதமற்ற, அமைதி விரும்பும், பயமுறுத்தப்பட்ட பங்களாதேஷ் மக்கள் உணவுக்காகவும், பாதுகாப்புத் தேடியும் எல்லையைக் கடந்தார்கள். பெரும்பாலான போர்வீரர்களும் இதனையே செய்தனர். முக்கியமான வெகுஜன இயக்கங்களும், அரசியற் கட்சிகளும் – குறிப்பாக அவாமி லீக்கும் – இக் காரணங்களுக்காகவே எல்லையைக் கடந்தார்கள். ஆனால், மக்களின் ஆதரவு பெற்றிருந்த காரணத்தினால் அவாமி லீக்கிற்கு கூடுதலான பொறுப்பு இருந்தது.

ஆனால், ஆயுதமற்ற நாடு எதிர்நோக்கும் வருங்காலத்தைப் பற்றி அவர்கள் ஒருபோதும் சிந்திக்கவில்லை. மக்களுக்கு ஏற்படக்கூடிய ஆபத்தை எதிர்கொள்ள அவர்கள் தம்மையும் மக்களையும் ஆயத்தப் படுத்தவில்லை. ஒரு நவீன இராணுவத்திற்கு எதிராக ஆயுதமற்ற மக்கள் போராடுவது முட்டாள்தனமாகும். ஆனால், இதுவே எமக்கு நடந்தது. இதற்காகவே நாம் பெரும் இழப்பைக் கொடுக்க வேண்டியிருந்தது. அவாமிலீக்கின் தலைமை உண்மையாகவே கோடிக்கணக்கான எமது மக்களின் வருங்காலத்தைப் பற்றி சிந்தித்திருந்தால், அவர்கள் கூடுதல் துணிவுடன் நடந்திருந்தால், நிலைமை மாறியிருக்கும். ஆனால் அப்படி நடக்கவில்லை.

எமது போர்வீரர்களுக்கும் இக்கருத்துப் பொருந்தும். அவர்கள் ஒருபோதும் ஒரு தேசிய விடுதலைப் போரை எதிர்பார்க்கவில்லை. இதன் விளைவு, உலகில் ஒரு நவீன இராணுவத்திற்கு எதிரான, தொடர்ச்சியான, ஒரு வித்தியாசமான போருக்கான எந்த ஆயத்தமும் இருக்கவில்லை. எமது மக்களுக்கும், குழந்தைகளுக்கும், ஏன் எமது போர்வீரர்களுக்குமான உணவையும் இருப்பிடத்தையும் இந்தியா மிக மகிழ்ச்சியுடன் வழங்கியது. இதனால் உலக அரசியலிலும், சர்வதேச நாடுகளிலும் இந்தியாவின் செல்வாக்கும் நன்மதிப்பும் அதிகரித்திருக்கும். உபகண்டத்தில் மேலாதிக்கம் எனும் இந்தியக் கொள்கை பலப்படுத்தப்பட்டிருக்கும். பங்களாதேஷின் நிலைமைகளினால் புவியியல், அரசியல் ரீதியாகவும், பொருளாதார, மூலப்பொருள் ரீதியாகவும் இந்தியாவே கூடுதல் பயனடைந்திருக்கும். இவ்வளவு மட்டுமே நான் போரைப்பற்றிக் கூற முடியும். எமது அதிகாரிகளும், போர் வீரர்களும் இந்தியர்களின் விருப்பங்களையும், போர்த்திட்டங்களையுமே கூடுதலாக நடைமுறைப் படுத்தினார்கள். இதுவே இந்த இழிநிலைக்கு எம்மை ஆளாக்கியது.

நான் விடுதலைப் போராட்டத்தில் சேர்ந்தவுடன், எமது படைகளின் தளபதியாகிய கேர்ணல் ஒஸ்மானி என்னைச் சந்தித்தார். பல்வேறு பகுதிகளுக்கும் சென்று போராட்டத்தின் நடைமுறையிலுள்ள குறைபாடுகளைக் கண்டுபிடிக்குமாறும், அவற்றை எவ்வாறு நிவர்த்தி செய்வது என்று அறியுமாறும் அறிவுறுத்தினார். நான் விஜயம் செய்த முதலாவது பிரிவு, மயிமன்சியர் டங்கயில் மாவட்டங்களை உள்ளடக்கிய 11வது பிரிவாகும். இப்போதைய உதவி இராணுவச் சட்ட அதிகாரியாகிய மேஜர் ஜெனரல் சியா ஒரு இராணுவப் பிரிவை அப்பகுதியில் அமைக்க முயற்சி செய்து கொண்டிருந்தார். இப்பிரிவு, இந்திய இராணுவத்தைச் சேர்ந்த பிரிகேடியர் சிங் ( Singh ) இன் கட்டுப்பாட்டில் இருந்தது. இப்படிப்பட்ட ஒரு முக்கியமான பகுதி ஒரு இந்திய அதிகாரியின் பொறுப்பின் கீழ் கொடுக்கப்பட்டது எனக்கு மிகவும் ஆச்சரியமாக இருந்தது.

டாக்காவைத் தாக்குவதாயின், இப்பகுதி மிகவும் முக்கியமாகும். நான் வேறு பிரிவுகளுக்கும் சென்றேன். எனது கருத்துகளையும், திட்டங்களையும் கூறினேன். நாம் சிறுசிறு தாக்குதல்களை மேற்கொண்டோம். அப்பொழுது அரசியல், இராணுவத் தலைமைகளின் குறைபாடுகள் தெளிவாகத் தெரிந்தன. எமது தேசியப் போராளது ஏறக்குறையத் தோல்வியடையும் நிலையிலிருந்தது. ஒரு திறமையான பயிற்சிபெற்ற, கூடுதலாகக் கல்விகற்ற எதிரிக்கெதிராக நாம் போராடிக் கொண்டிருந்தோம். அவர்கள் கடுமையான பயிற்சி பெற்றிருந்ததுடன், நவீன ஆயுதங்களும் கொண்டிருந்தனர். எமது பக்கத்தில் ஒன்றிணைக்கப்பட்ட தலைமையை அமைக்கக்கூடிய ஒரு நிலையான இராணுவத் தலைமையில்லை. எனவே தீர்மானமற்ற நிலையிலும் உற்சாகமற்ற நிலையிலும் இருந்தன எமது படைகள். எமக்கான ஒரேயொரு வழி கெரில்லாப் போராட்ட முறையாகும். ஆனால் அப்போது வெளிநாட்டு மண்ணில் ஒரு முழுமையான இராணுவத்தை உருவாக்கும் முயற்சியில் எமது தளபதிகள் ஈடுபட்டிருந்தனர். எமது இளைஞர்கள் துணிவிலும் தேசப்பற்றிலும் எந்த விதத்திலும் சளைத்தவர்களல்லர். ஆனால், சரியான முறையில் இயக்கப் படாத நிலையில், நாடு பூராவும் சிறுசிறு குழுக்களாகச் சிதறி, தேசப்பற்று மிகுந்த உணர்ச்சியால் எப்படியெப்படியோ அலைப்புற்று இயங்கினார்கள். ஒருபொழுதும் பாக்கிஸ்தானிய இராணுவத் தாக்குதல்களை எதிர்பார்க்காதபடியால் அவர்கள் பாக்கிஸ்தானின் கொடுமைகளுக்கு ஆளாகினார்கள்.

தொடரும்...



Mahizhi

# The Incinerated Jaffna Library

The violence unleashed on the Tamil people is a striking testament of a vicious and hostile enemy who has hardened their hearts to kindness and are willing to go to any length to destroy a race.

The massacre of people alone cannot be considered genocide. The forms of an ethnic conception continue to destroy the art and culture of the motherland, to destroy their places of worship, to expropriate the native mother land and to dehumanise Tamils, to annihilate their ancient historical evidence and to completely falsify their history. In this sense, the Jaffna Library burning that took place at midnight on May the 31st of 1981 was a tragic scar in Tamil history. The Jaffna library burning should also be seen as a war crime that could be recorded as the culmination of genocides.

The person who was instrumental in the formation of the Jaffna Library was 'Chakkadathar' Mr Sellappa from Atchuveli. The library, which he founded with a few books in his house on November the 11th of 1933, laid the foundation to become a public library in 1934 following a decision taken at a meeting at the Central College, Jaffna.

With the tireless work of social activists and the general public, and the generous help of foreign and local organisations, the Jaffna Public Library was relocated and a new building erected. The Jaffna Library (which has grown to possess one of the largest collection of books in South Asia with over 97,000 archives of rare manuscripts, available books, historical evidence, documents, journals, etc.) dating back to the 1800s, stands as a great testimony to the historical archeology of the Tamils to the world.

As a deliberate expression of a genocide, the Jaffna Library was set on fire by Sinhala government's soldiers, the majority disguised as civilians who came in mobs on May the 31st of 1981. All available treasures were burned to ashes. All the Tamil hearts around the world were synonymous with the charred library. Despite the fact that the Sinhala Minister of that time Mr Gamini Dissanayake was the direct culprit in the burning of the library, no law has punished these state terrorists.



This is a genocidal war crime. A crime that must be brought before the law and punished. The Sinhala government

must be held accountable for this war crime as well. Taking a look at a similar incident:

The Serbian army occupied the city of Serjevo in Bosnia and set fire to the Bosnian University Library on August 25-26th of 1992.

The library, which housed about two million books, antiques and pictures, was completely set on fire by Serbian government forces.

This heinous incident was added as the main source of the genocidal charge against the non-Serbian who was later put forward by Slobodan Miloševic, the President of Serbia. In particular, at the ses sion of the International Crim inal Tribunal for the former Yugoslavia (ICTY), founded by the United Nations, on July the 8th of 2003, Harvard librarian Andras Riedlmayer recorded the testimony of Serbian forces from the Bosnian University Library.

At the same time, the library of the University of Bosnia, which was destroyed by fire, has been rehabilitated with the financial assistance of the European Union, and a 'memorial stone related to




the destruction of the library by Serbian forces' has been opened at that gate.

The memorial stone is marked 'Do not forget, remember and warn'.

There is no difference between the Jaffna library incident and the Bosnian library incident . In the face of a world that has accepted Serbs as war criminals, the Sinhala nation must also be imprisoned. We need justice. Let the history lessons of the world be a guide for us. We will stand upright as a united force.

**The person who was instrumental in the formation of the Jaffna Library was 'Chakkadathar' Mr Sellappa from Atchuveli. The library, which he founded with a few books in his house on November the 11th of 1933, laid the foundation to become a public library in 1934 following a decision taken at a meeting at the Central College, Jaffna.**



# அம்மா

அம்மா ஏன் அம்மாநீ
இப்படி ஆனாய்?
உன்னை இந்நிலைக்கு
ஆளாக்கியது
விதியின் வேலையா?

அன்று நீ - அம்மா
அழகான ஆண்பிள்ளை
இரண்டைப்பெற்று
பாலூட்டி சீராட்டி
பாசமெல்லாம் பொழிந்து
உயிராக வளர்த்தாயே!!

பொத்திப் பொத்தி வளர்த்த
பிள்ளைகள்
புன்னகையோடு
பூரிப்பாய்
வளர்ந்த போது மகிழ்வோடு
வளமாய் வாழ வழி - நீ
சமைத்தாய்.
உனையுருக்கி மெழுகாகி
வாழ ஒளியானாய்!

இன்று
நிழல்தர மரங்கள்
ஏதுமின்றி
நிம்மதி வாழ்க்கை
தானிழந்து
தள்ளாத
வயதிலும் நீ
தன்னம்பிக்கையோடு
வாழ்கிறாய் இன்று!!

உன்னை நினைக்கும்
போதிலே
உயர்வாய் எண்ணத்
தோன்றுதம்மா!!
தன்னம்பிக்கை துணையாக
வாழ்வதில் நீ
மகாராணியம்மா!!

தன்மானம் உள்ள தாயே!
உன் பிள்ளைகள்
வெட்கப்படுவார்
உன் உறுதி கண்டு.

சாலையோரம் மரம்
நடுபவர் அதன்
பயனை எதிர்பார்ப்பதில்லை
சுயநலமற்ற தாயும்
எதனையும்
எதிர்பார்ப்பதில்லை

பெற்றவர் மனதை
நோகடிக்காத
பிள்ளைகள் கிடைப்பது
வரம்.!!
இது எல்லாருக்கும்
அமைவது இல்லை.
அமைந்தால்.?
முதியோர் இல்லம்
தேவை இல்லை.!!

பவானி



Paari

# Island of Sri Lanka on the verge of death

As Sri Lanka's foreign exchange reserves have been depleted, severe political and economic crisis' have pushed people into irreversible poverty. In this context, experts are concerned that more than 12% of the approximately 22 million people on the island of Sri Lanka have been pushed below the poverty line and millions more are losing access to food, health and job security.

According to Reuters, a World Bank spokesman said: "The current economic crisis is having a devastating effect on human development and will completely disrupt the basic livelihoods of families." It is noteworthy that he feared that 'malnutrition in families would become inevitable'.

Inflation, which was 46% last April, is now at a record high. A good example of these prices is when the price of an egg increased from just ten rupees to sixty rupees. As the working class people struggle to survive, severe shortages of medicine and medical equipment are also beginning to take their toll. Now that the government is running out of money to pay civil servants, the civil servants are also at risk of losing their jobs. With all of this chaos prevalent on the Island, tens of thousands are fleeing the country. Just as people have been waiting a long time for fuel, now they are waiting to get a passport.

Prime Minister Ranil, who is considered to be the safe house for civilians in the current situation , is running here and there and asking for credit from everyone. It has been four weeks since Prime Minister Ranil Wickremesinghe started reassuring the Sri Lankan nation that ships were queuing up outside the harbour, that the fuel crisis would be resolved in two weeks time. People are still waiting in line for fuel and losing their hope.

Sri Lanka requested a loan of over $ 3 billion from the 'International Monetary Fund' as an emergency fund to



meet the country's economic challenges which as of now is a pending request. Prior to this, Sri Lanka had borrowed a debt of $ 50 billion from foreign debt investors, however, with the current situation, they were unable to pay it back. More worryingly, they have lost the trust of two of the most important credit rating agencies by failing to pay an instal ment for the first time in history, with this one being $ 78 million just interest alone.

This is one of the main reasons why Sri Lanka, who have been reluctant to borrow from the International Monetary Fund (IMF), is yet to receive a full loan. IMF has agreed to lend $600 millions so far. Above all, the World Bank ex pects Sri Lanka to restructure their debt list and build strong foundations to address long-term economic weaknesses. It is difficult to get a loan until this is done. On top of this, the ban imposed on Sri Lanka due to the fertiliser importation problem in March and this ban effects on tea-rubber expor tations from Sri Lanka , all are contributing negatively to the IMF's decision.

In any case, no country other than India seems to have helped Prime Minister Ranil so far. India has pledged $ 16 million in humanitarian aid and $ 3.5 billion in loans. Despite some help from India in the form of compost and fuel, they are all 'corn on the cob for a hungry elephant.'

Since coming to a position of power, Prime Minister Ra nil has been saying that the next three weeks will be very tough. This is an understatement. To avoid the famine that people have not faced in 70 years, fuel problems have plagued the entire island. With the fuel shortage limiting people of all occupations, people desperately wait in never-ending lines many taking their last breath in the process. Agriculture Minister Mahinda Amaraweera urges farmers to shift their attention from the lack of fuel to producing paddy in the fields. However, noncritical departments dur ing this food shortage have the little fuel available easier to access than the farmers who are one of the priorities.


Putting all this aside, two new ministries have sprung up and Dhammika Perero and Pavithra Vanniyaraichi are to be in charge. At this point, we are obliged to remind you again of the inauguration of 'Ranil Wickremesinghe', The government of Sri Lanka grandly proclaimed that they will reduce the cabinet and resolve the biggest economic pro blem in the country by "minimising all the big problems". Clearly, appointing two new ministries directly contradicts their aforementioned claim with the latter statement being even more false.



Furthermore, whenever government leaders change, the Sri Lankan rulers have made it a habit to pretend that there is nothing wrong with their selfish principles. Instead of amending their rules to serve the nation of Sinhalese and the Tamils and the rest, they always mould it to suit their personal agendas. Mr Ranil Wickremesinghe is no excep tion to this, who is on the verge of bringing in the 21st Amendment.

Whatever happens, the Tamil people must act with vigilance and protect themselves.

Sibi



# The Internet and The Youth of this Generation

The internet is a vast bank of information with answers and opinions to a plethora of questions of various genres and topics. This reservoir of data allows people of all shapes sizes and ages to do a multitude of actions, from seeking insight online to watching a new movie or tv show. With it's easy availability, people in the year of 2022 rarely have to make an effort to seek external information. Clearly, it's normalisation means younger people will naturally gravitate towards using the internet and today we are going to look at the effects it has on the impressionable youth.

With the great increase of internet usage in these last few years, the internet has become a safe refuge for students. Statistics from Broadbandsearch show that from the years 2020-2022, the usage of internet increased by 1355% during Covid-19 lockdown laws with an approximate 5.25 billion people out of the 7.9 billion humans on earth having access and using the internet frequently. Seeing how information is freely available younger people of this generation have a clear advantage of saving time and money compared to the youth of previous generations. The parents of many from this generation had to seek external resources for knowledge but with the existence of the internet, it acts as a bridge to straighten the process of seeking and it makes finding the right information easier. With schools, universities and all places of education encouraging the use of websites, students must have fellowship with online resources to move forward and further develop society once they are working citizens. Furthermore, because people can connect with peers from across the world, the youth also have the ability to communicate with and learn the languages, background and cultures of unvisited places with ease. The internet proves to be productive for students.

On the other hand, despite the many productive uses for the internet, you need to be aware of how it can induce a lazy lifestyle. Even though accessing information in minimal time is valuable, being raised in that environment creates a lack of drive to proactively seek knowledge. Knowing the solution to a problem is always on the internet causes us to trust in the internet, inducing an effect called 'Digital Amnesia'. To put it plain, it means we subconsciously believe the internet houses the solution so our brain doesn't prioritise remembering it. While this naturally happens to people of all ages, kids being raised like this will undoubtedly cause them to rely on this external source more than in actively learning. When this translates to other fields of life, children and teenagers may take the easy painless route rather than the uncomfortable - the only route that encourages growth and the one of adult life. As evidence of this lazier lifestyle, children of older generations used to go out and have fun playing with other friends whereas nowadays most kids prefer to stay indoors playing video games. Speaking of, the internet is also a place of abundant entertainment. While there's nothing inherently wrong with enjoying yourself with a movie or playing games, the youth must be taught self-restraint from certain activities so that they lead a productive and fruitful life. If children use the internet predominantly for short term pleasures, in their futures they will have an upward battle with discipline and motivation. This mental lethargy and longing for quick 'happiness' will give short term dopamine rushes, influencing

the younger generation to enjoy these fleeting pleasures and turn from the important duties of life. Healthline says some symptoms of depression include low motivation; feeling helpless; and a loss of interest in things that used to interest you which can be triggered when a person used to short term pleasures spends time proactively learning. The older generation had less problems here compared to this generation, further establishing the importance of showing the youth self-restraint. We can see from this that the internet is incredibly helpful however children must be taught self-discipline to maintain a balanced life rather than an unhealthy dependence on it and a life of hedonism.

In addition to this, impressionable males and females are



at risk of being exposed to and being interested in sexual content. While the internet is safe and protects children from unrestricted content, pornography is freely accessible for all but those with parental controls. These industries with their agendas teach kids to sexualise and objectify women and even men in many cases. While you can argue this isn‘t something a kid should be worried about, at some age statistics show teenagers watch pornography as they start to go through puberty. While the benefit of the internet is a lot of resources are free to access, this also means pornography. A study Webroot promoted suggests teenagers who watch pornography have a higher risk of depression and feelings of loneliness. Pair this with a lazy lifestyle and that teenager with a future and great potential has to now struggle with multiple setbacks before they could have stable self-esteem again. While only 1/3 of pornography viewers are women, the portion of female youths that view this kind of material may start living a lifestyle that doesn‘t reflect their self-worth so it‘s equally dangerous for both genders. There have been cases even in school where the girl sent a nude picture and the boy who received it spreads it through the school, with some restraint from both sides this could‘ve been avoided. What‘s worrying is that according to that same study, 68 million searches for pornography happen every day. The clear solution to this would be the aforementioned self-discipline. Our youth should be free enough to make their own decisions but responsible enough to see what decisions will only bring short-term pleasure and long-term distress.

Speaking of freedom, one of the greatest qualities about the internet is the fact that anyone can upload whatever they please. With this freedom of speech accepted by almost all social medias, people have the liberty to express who they are and what they stand for online on full display. This is great as young talented individuals have a platform in which people can witness their skills and act as a foundation to their future careers. Even ignoring the professional side of this freedom, the fact that the youth can display their interests online and meet likeminded people is a similarly amazing idea. As humans, we are naturally social creatures with a tribe like mentality. Our youth can find specific groups they feel like they belong in online where they can share each other‘s experiences and bond. Plenty of online friends made are safe to interact to with some people meeting these online pen pals. However, parents should always be wary of evil-minded people trying to abuse the youth online. For the most part, our youth are safe as long as they don‘t abuse this freedom by posting personal and private information instead of expressing themselves.

We can see balanced arguments presented for whether the internet proves as beneficial or a hindrance to the younger generation. Many of the negatives that come with using the internet can be avoided with self-restraint and discipline so the theme we are promoting here is that we must teach our youth to have self-restraint even at the cost of personal pleasures. To gain one thing far greater than the other, we have to sacrifice that lower thing. Selfishness can be limited through this too, for a functional society it requires the people in it to forsake some of their desires to lend a helping hand to others with grace. Therefore, in this way children should see the issues of a lack of control and willingly choose to limit their usage on the internet themselves. The internet is a vast expanse of beautiful content, resources and ways of communication which we should be grateful for having, children are no exception to this and for the most part should be encouraged to use the internet.


congee
கஞ்சி
JUST ADD HOPE
REMEMBER ME
mullivaikkal
WWW.CONGEEOFHOPE.ORG
REMEMBERME@CONGEEOFHOPE.ORG
CONNECT WITH US
CONGEEOFHOPE
"கஞ்சி" பரிமாறுவோம்
முள்ளிவாய்க்கால் கதை பகிர்வோம்.
Sri Lanka
வலிமை
துணிவு
நம்பிக்கை
கஞ்சி பரிமாறுவோம்
சமூக நம்பிக்கையை கட்டி எழுப்புவோம்
RECIPE FOR hope
BOIL 5 CUPS OF WATER,
ADD 200 GRAMS OF RED RICE TO IT,
ADD IN SALT AS DESIRED,
AND, JUST ADD HOPE
1
முள்ளிவாய்க்காலை
நினைவேந்துங்கள்
மே 12 தொடக்கம் 18 வரையான காலத்தை முள்ளிவாய்க்கால் இனப்படுகொலை வாரமாக பிரகடனப்படுத்துங்கள்
2
நம்பிக்கையை
பரிமாறுங்கள்
கஞ்சியை சமூக நம்பிக்கையின் அடையாளமாக கருதி குடும்பத்தவருக்கும் அயலவருக்கும் இவ்வாரத்தில் ஒருவேளையேனும் பரிமாறுங்கள்.
3
கதைகளை
பகிருங்கள்
முள்ளிவாய்க்கால் கதைகளை பரிமாறுங்கள். எமக்கு இழைக்கப்பட்ட அநீதியை உரக்கச் சொல்லுங்கள்.



# இலங்கையில் அதிகரிக்கும் வரிசை











